# முழவம்-II

## மாணவ முதல்வர் வெளியீடு








கிளி /முழங்காவில் மகாவித்தியாலயம்
(தேசிய பாடசாலை)

**கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்**
**(தேசிய பாடசாலை)**

KN/MULANKAVIL MAHA VIDYALAYAM
(NATIONAL SCHOOL)

# முழவம்-II

# 2025

**திகதி-09.09.2025**

**இடம்-கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்**
**(தேசிய பாடசாலை)**

**பாடசாலைக்கீதம்**

முத்தமிழ் கல்வியை தித்திக்கவே நிதம்
முன்னிற்கும் எங்கள் வித்தியாலயம்
வித்தகமாய்க் கல்வி விரும்பி நாம் கற்கும்
முழங்காவில் என்றும் வாழியவே!

ஆசிரியருடன் அதிபரும் சேர்ந்து
அரிய நற்கலைகளைத் தந்திடவே
சீரிய கலைகளால் சிறக்கும் வித்தியாலயம்
சிறப்புடன் வாழிய வாழியவே!

வாழையின் பசுமை வனப்புடன் ஓங்கிட
வண்ண பொற்பழனங்கள் நெல்மணி சிந்திட
நாளைய சிறுவரைத் தலைவர்களாக்கும்
நல் மகா வித்தியாலயம் வாழியவே!

நாற்றிசை எங்கும் நின் புகழ் ஓங்கிட
நலமுடன் மாணவர் கலைகளைக் கற்றிட
சீர்புகழ் கம்பன் வள்ளுவன் தோன்றிட
தித்திக்க வாழய வாழியவே
வாழியவே வாழியவே வாழிய வாழியவே!

## கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

## (தேசிய பாடசாலை)

**மகுடவாசகம்**

அறிவு வளர் அகிலம் ஆள்

## MOTTO

"GROW THE KNOWLEDGE AND ROLE THE WORLD"

**நோக்கக்கூற்று**

மாறிவரும் நவீன உலகில் சவால்களை எதிர் கொண்டு வெற்றி பெற்று கலாசார விழுமியங்களுடன் கூடிய சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் பண்புடைய நற்பிரஜைகளை உருவாக்குதல்.

## VISION

COMPETING THE CHALLENGES IN THE DEVOLOPING MODERN WORLD,PROVIDE BETTER CITIZENS WHO CREATS AN ENERGETIC SOCIETY WITH VALUES AND CULTURE.

**பணிக்கு கூற்று**

''பாடசாலை நோக்கி வரும் சிறார்களை அறிவு,திறன், மனப்பாங்கு விருத்தியுடன் ஆளுமை மிக்க நற்பிரஜைகளாக உருவாக்குவோம்.''

## MISSION

BRINGING UP THE CHILDREN, WHO COME TOWARDS THE SCHOOL TO LEARN AS BETTER CITIZENS WITH KNOWLEDGE,SKILLS,ATTITUDES AND GREAT PERSONALITY.

# வாழ்த்துரை



கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தின் மாணவ முதல்வர் சபையினால் வெளியிடப்படும் ‘‘முழவம்-02’’ இதழிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களின் ஆளுமைத்திறன் வெளிப்பாட்டின் ஓர் அங்கமாக இவ் இதழ் வெளியீடு அமைந்துள்ளது. அவர்களின் சிந்தனைவிரிவு, தேடல்திறன், நூலுருவாக்கம், கணினிப்பயன்பாடு என்பவற்றுக்கு களம் அமைத்துக் கொடுப்பதோடு சமூகம் சார் தொடர்பாடல் திறனை மேம்படுத்தும் வகையில் ‘‘முழவம்-2’’ இதழ் வெளியீடு அமைந்துள்ளமை சிறப்பான விடயமாகும்.

மாணவ முதல்வர்கள், உயர்தரமாணவர்கள்,ஆசிரியர்களின் ஆக்கங்களை இவ் இதழ் தாங்கி வந்துள்ளமை பாராட்டத்தக்கது. இப் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி.சிவானந்தி பரதன்**
**அதிபர்**
**கிளி /முழங்காவில் மகாவித்தியாலயம்**
**(தேசிய பாடசாலை)**

# வாழ்த்துரை



கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயத்தின் மாணவ முதல்வர் சபையினால் வெளியிடப்படும் **முழவம்** சஞ்சிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமை அடைகின்றேன்.

மாணவர்கள் தாம் பாடசாலையில் பெற்றுக் கொண்ட அறிவு,அனுபவம் ,திறன்கள் என்பனவற்றை பிரயோகப்படுத்தும் வகையில் ஆக்கங்களைப் படைத்து இதழாக வெளியிடுகின்றமை சிறப்பான விடயம் ஆகும். இதழ் ஒன்றினை வெளியிடுவதற்கு வேண்டிய அத்தனை ஆளுமைக் கூறுகளையும் கற்றுக் கொள்கிறார்கள் என்பது மற்றொரு சிறப்பான விடயம் ஆகும்.

படைப்பாக்கங்கள் மேலும் விரிவு பெற்று இனி வரும் காலங்களிலும் முழவம் தொடர்ந்து வெளிவர வாழ்த்துக்கள் .

**திரு.ப.ஆனந்தராசா**
**முன்னாள் அதிபர்**
**கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்**

# முன்னுரை



கிளி/முழங்காவில் மகா வித்தியாலய மாணவமுதல்வர் சபையினால் இவ் வருடம் ''முழவம்02'' எனும் சஞ்சிகையினை வெளியிட தீர்மானித்துள்ளோம். அதற்கமைவாக மாணவர்களதும் ஆசிரியர்களினதும் பயன்மிக்க ஆக்கங்களை தாங்கியதாக ''முழவம்-02'' என்ற பெயரில் சஞ்சிகை வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்வு அடைகின்றோம்.

கடந்த வருடம் மாணவ முதல்வர் சபையினால் ''முழவம்'' வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அதன் அடுத்த பகுதியை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

எமது பாடசாலையின் பெயரையும், ஊர்ப் பெயரையும் நிலைநாட்டும் வகையிலும் எமது பாடசாலையின் பண்பாட்டு நடவடிக்கையினை வெளிக்கொணரும் வகையில் ''முழவம்-02'' என்ற பெயரினை சூட்டி இச் சஞ்சிகையினை பிரசவிக்கின்றோம். மிகவும் குறுகிய காலத்தில் இச் செயற்பாட்டினை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தமையால் மிக பரந்த அளவில் இதனை வடிவமைக்க முடியாமல் போனமைக்கு மனம் வருந்துவதோடு, எமது பாடசாலையின் மாணவ முதல்வர் சபையினால் இச் செயற்பாடு பயனுறுதி மிக்க வகையில் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையோடு ''முழவம்-02'' மலர்க்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**ப.கலைநிலவன்**
**நூலாசிரியர்**
**மாணவத்தலைவன்**

# சிரேஸ்ட மாணவத்தலைவர்கள் சிந்தனையில் இருந்து





எமது முன்னைய மாணவத்தலைவர்கள் குழுவினால் முதன் முதலில் கடந்த வருடம் முழவம் சஞ்சிகையை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மிகவும் குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பான வகையில் இடம்பெற்று முழவம் சஞ்சிகையானது வெளியிடப்பட்டது. அதே போன்று இந்த வருடம் 2025 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் அனுசரனையோடும் அவர்களது பங்களிப்புடனும் மாணவத்தலைவர்களாகிய நாம் இந்த முழவம்-11 சஞ்சிகையை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

2017 ஆம் ஆண்டு கால்வைத்த போது இந்தப் பாடசாலையின் செல்லக்குழந்தைகளாக நாம் வழிநடத்தப்பட்டோம். எமது பாடசாலையின் மாணவத்தலைவர்களாகிய நாம் தரம் 05 இல் தலைமைத்துவப் பண்புடன் நடந்து கொண்டு ஏனைய மாணவர்களை வழிநடத்திய போதும் தேசிய பாடசாலைக்கு வந்ததும் நாம் குழந்தைகளாகவே பராமரிக்கப்பட்டோம். ஏமக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்போதிருந்த எமது மாணவத்தலைவர்களால் நாம் அன்பாகவும் பண்பாகவும் வழிநடத்தப்பட்டோம்.

அன்றே எம் மனதில் பதிந்தது நாம் மாணவத் தலைவர்களாக வரவேண்டும் இவர்களை போல எமது பாடசாலையை நன்றாக வழிநடத்த வேண்டும் என்று.

அன்றிலிருந்து இன்று வரை எமது பாடசாலையின் முகாமைத்துவ குழுவின் வழிநடத்தலில் மாணவர் முதல்வர் சபை சிறந்த ஒழுக்கமுள்ள பிரஜைகளை சமூகத்தில் உருவாக்கி வந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான இப்பாடசாலையின் சிரேஸ்ட மாணவத்தலைவர்களாக நாம் தெரிவு செய்யப்பட்டமைக்கு எமது அதிபர், பிரதி அதிபர்,உதவி அதிபர், ஆசிரியர்கள்  மற்றும் எமது எமது முன்னோடிகளாக திகழ்ந்த மாணவத்தலைவர்களே காரணமாகின்றனர்.

எங்களது வாழ்விலும் இப்பள்ளி பருவகாலம் நிறைய அனுபவங்களையும் அறிவையும் தந்துள்ளது. இது எமது பிற்கால வாழ்விற்கு பெரிதும் உதவியாக அமையும். எம்மை சிறந்த தலைமைத்துவ ஆளுமையான நல்ல மனிதர்களாக வளர்த்து விட்ட பாடசாலை சமூகத்திற்கு என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். இது போன்று எமது அடுத்து வரும் சந்ததிகளும் சிறந்த ஒழுக்கமுள்ள சமுதாயமாக உருவாகும் எமது பாடசாலையும் அதனை உருவாக்கும்  என வாழ்த்தி நிற்கின்றோம்.

நன்றி.

**மோ.கிரித்திகன்**
**பை. சிவதாரணி**
**சிரேஸ்ட மாணவத்தலைவர்கள்**


மோ.கிரித்திகன்
விஞ்ஞானப்பிரிவு


ச.சங்கீர்த்தனன்
கணிதப்பிரிவு


பா.சஞ்சித்
கலைப்பிரிவு


ஜெ.கோமகன்
தொழிநுட்பப்பிரிவு


ப.கலைநிலவன்
விஞ்ஞானப்பிரிவு


கோ.கொலிஞ்
தொழிநுட்பப்பிரிவு


அ.யேசுகாந்
தொழிநுட்பப்பிரிவு


பி.பபிசன்
கணிதப்பிரிவு


கோ.டியூலன்
கணிதப்பிரிவு


இ.தமிழினியவன்
தொழிநுட்பப்பிரிவு


இ.கலைப்பிரியன்
தொழிநுட்பப்பிரிவு


உவைத்
கலைப்பிரிவு



ம.மகிசன்
கணிதப்பிரிவு



ச.கேதிஸ்
தொழிநுட்பப்பிரிவு



பு.அசோபன்
தொழிநுட்பப்பிரிவு



மோ.தசாங்கன்
தொழிநுட்பப்பிரிவு



பா.சனோஜன்
தொழிநுட்பப்பிரிவு



பை.சிவதாரணி
கலைப்பிரிவு



கா.த்ரிஷா
விஞ்ஞானப்பிரிவு



ச.சானுஜா
கலைப்பிரிவு



ர.சமரிசை
கலைப்பிரிவு



ச.சுஜோமிகா
கலைப்பிரிவு



ந.நமிதா
தொழிநுட்பப்பிரிவு



செ.பிறையினி
விஞ்ஞானப்பிரிவு



ஞா.கலையரசி
கலைப்பிரிவு



ஜ.அப்ராபானு
கலைப்பிரிவு



றொ.நுஸ்கா
கலைப்பிரிவு



சி.சுவர்ணா
கலைப்பிரிவு



இ.சுஜீபா
கலைப்பிரிவு



கா.தனுசியா
கலைப்பிரிவு



இ.டர்சிகா
கலைப்பிரிவு



பானுஜா
கலைப்பிரிவு



ஜோ.அஸ்வினி
கலைப்பிரிவு



ஜெ.கீர்த்திகா
கலைப்பிரிவு



மு.தர்ஷாயினி
கலைப்பிரிவு



ச.துஜிதிகா
கலைப்பிரிவு



ச.தமிழ்ப்பிரியா
கலைப்பிரிவு



பா.தனுசாளினி
கலைப்பிரிவு













# வலிமைமிகு வேழ முகத்தோன்

கவிதை ஒன்று பாட நான் கவிஞரும் அல்ல
புலமையோடு பேச புலவரும் அல்ல
கடவுளுக்கு கவி பாட கன நாளாக ஆசை
களம் ஒன்று கிடைத்தது இது கவிதையோ
தெரியவில்லை இருந்தாலும் கூறுகின்றேன்

முழங்காவில் பதியின் துதிக்கை முகனே
வணங்கினோம் உம்மை வாழ்வளிப்பாயே!
களம் கண்ட வனத்தின் கரையுறை முதலே
வரையறையில்லா வரம் அருளிறையே!
தலைகள் குனியா வாழ்வளிப்பாயே
தாய் நிலம் வாழ அருள் பொழிவாயே!
வளம் கொண்ட ஊரில் பலம் என்று அமர்ந்தாய்
பழம் கொண்ட மரங்கள் செழித்திட செய்தாய்
உணவை படைக்கும் ஊரின் ஒளியே!
ஒருகரை பார்த்தால் கடலின் கரையே!
வற்றாத ஊற்றை பூமியில் தந்தாய்
சத்தமே இல்லா சாகசம் செய்தாய்
கணங்களுக்கு எல்லாம் நாதனுமானாய்
காரிய சித்தியன் முதல்வனுமானாயே!
ஏதிலிகள் ஆகி வந்தோம் பேதளிக்கவில்லை
வேழ முகன் நீ அருள்வாய் வாழ வழி அன்றோ
பழிகள் பல கொடுத்து விட்டோம் வலிகள் கோடி இங்கே
எலியேறும் பெருமானே விடையொன்று தாராயோ?

வலியது வாழுமென்று வரலாறு சொல்லுதையா!
ஒளி ஒன்று தருவாயா இருள் இங்கு தொல்லை ஐயா!

**பை. சிவதாரணி**
**கலைப்பிரிவு(2025)**

# பணியுமாம் என்றும் பெருமை

பணியுமாம் என்றும் பெருமை என்பது ஆன்றோர் வாக்கு. அறிவினால் ஏற்படும் பெருமை தானாகவே பணியும். பணபலம், பதவிப்பலம், சமூகச்செல்வாக்கு என்பனவற்றை பயன்படுத்தி சிலர் பெருமை மிக்கவராக தங்களை இனங் காட்டிக்கொள்கின்றார்கள். இத்தகையோரின் பெருமை நீண்ட நாட்களுக்கு நிலைக்காது. இதனாலேயே நம் முன்னோர் கல்வியினால் கிடைக்கும் பெருமையே சிறப்பானது எனக் கருதினார்கள்.ஒருவருக்கு கல்வி அறிவினால் பெறப்படும் பெருமையே உண்மையான பெருமையாகும். நாலடியார் என்னும் நன்னூல் ‘‘கல்வி அழகே அழகு’’ என்று உரைத்துள்ளமை இதனையே வலியுறுத்துகின்றது. ‘‘நிறைகுடம் தளம்பாது’’ என்பர் அறிவுடையோர். முற்றிய நெற்கதிர் தலை சாய்ந்து நிற்கும் அதேபோன்று ஆழ்ந்தகன்ற அறிவுடையோர்கள் எப்போதும் தம்மை பற்றிப் புகழ மாட்டார்கள். பெருமை பேசவும் மாட்டார்கள் இனிய வார்த்தைகளினைப் பேசுவார்கள் அறிவுடையவர்கள் நிறைகுடம் போன்றவர்கள். அறிவிலிகள் குறைகுடம் போன்றவர்கள்.

எந்நாளும் பணிவுடையவர்களினையே மக்கள் மதிப்பார்கள். அவர்களது செயல்கள் நல்லெண்ணமாகவும் மற்றவர்களுக்கு நன்மை பயப்பனவாகவுமே அமையும். வீண் ஆடம்பரங்களை விரும்ப மாட்டார்கள். பட்டம் பதவிகளை எதிர்பார்த்து ஓட மாட்டார்கள். அவை தாமாகவே அவர்களைத் தேடி வரும். பணிவுடையோர் பிறர் நலம் கருதுபவர்களாகவும் தன்னலமற்றவர்களாகவும் விளங்குவார்கள். இத்தகைய பண்பு இயல்பாகவே அவர்களிடம் காணப்படும். இன்னா செய்தாருக்கும் இனியதே செய்யும் குணம் உடையவர்களாக காணப்படுவார்கள்.

பணிவற்றோர் செருக்குடன் நடப்பர். பிறர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காக தேவையற்ற விடயங்களில் தலையிட்டு தம் அறிவீனத்தை இனம் காட்டிக் கொள்வார்கள் ‘‘மெல்லென பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்’’ என்பது பழமொழி. மென்மையாக விடயங்களை அணுகி ஆராய்ந்து செயல்படும் ஆற்றல் பெருமைக் குணமுடையோரையும் சான்றோரையுமே சாரும். பகைவனையும் நண்பனாக கருதி செயற்படும் பண்பு அறிவுடைய பெரியோர்களுக்களுக்கே உண்டு. பெருமைக் குணம் உடைய சான்றோரை எவரும் இலகுவில் அணுகி தம் குறைநிறைகளை உணர்த்திட முடியும். அற்ப குணத்தோரை அணுகுதல் அரிது. அணுகிய போதும் அவர்கள் தம் பெருமைகளை பேசுவாரன்றி நம் குறைகளை போக்க மாட்டார்கள். அவர்களுக்கு சொல்லும் செயலும் குறை உடையனவாகவே விளங்கும்.

உலக வரலாற்றை நாம் பார்ப்போமாயின் பெருந்தன்மை மிக்கோர் பணிவுடையோர் ஆவர்.இவர்கள் மக்கள் தலைவனாக நீண்ட காலம் மாண்பு பெற்றிருந்தனை காணமுடியும். மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், அன்னை தெரேசா அம்மையார் போன்றவர்கள் எடுத்துக்காட்டாகும். எனவே அறிவுடைய சான்றோர்கள், அரசியற்தலைவர்கள், சமூகத்தொண்டர்கள், சரித்திர நாயகர்கள் அனைவருக்கும் பணிவே அணிகலன் ஆகும். இந்த அணிகலனையே சமூகமும் எதிர்பார்க்கின்றது. பணிவுடன் வாழ்வோரே உண்மையான மனித வாழ்க்கையினை வாழ்பவர்கள் ஆவார்கள். வாழ்வாங்கு வாழும் முறையும் அதுவே என்று கூறினார்கள். இதன் உண்மையினை உணர்ந்து நாமும் இவ்வையகத்தில் பணிவுடன் வாழ்வாங்கு வாழ முற்படுவோமாக.

**ஜெ.கீர்த்திகா**
**கலைப்பிரிவு**

# பெண்களின் வாழ்வில் கல்வியின் முக்கியத்துவம்

‘‘கல்வி என்பது உடல் ,உள்ளம் ,ஆன்மா ஆகியவற்றிலிருந்து நல்லனவற்றை வெளிக்கொணர்வதற்கு உதவுகின்றது’’ என காந்தியடிகள் கல்விக்கு விளக்கம் அளித்துள்ளார். பொதுவாக மனிதர்கள் தம் உடல், அறிவு, உணர்ச்சி ஆகிய மூன்றும் இணைந்த வகையிலே செயற்படுகின்றார்கள். இம் மூன்றையும் சீரான முறையில் இயங்கச் செய்து தான் வாழ்கின்ற குடும்பம், சமூகம், நாடு என்பதை முன்னேற்றும் பாதையில் கொண்டு செல்வதற்கு கல்வி அறிவு இன்றி அமையாதது. இதனால் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு உதவுகின்ற பலம் மிக்க கருவியாக கல்வி அமைந்துள்ளது.

உலக வரலாற்றில் பல சாதனைகள் புரிந்து தமக்கென தனி இடம் பிடித்துக் கொண்ட பெண்கள் தொடர்பான செய்திகள் பல அறியப்படுகின்றன. வீரப் பெண்கள் ,ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெண்கள், அரசியல் துறைகளில் பெயர் பதித்துக் கொண்ட பெண்கள் எனப் பல கோணங்களில் நின்று அவர்களின் சாதனையை நோக்க முடிகின்றது. ஆரம்ப காலங்களில் அறியாமை, வழிபட்ட மதம் மற்றும் சாதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றால் பெண்ணானவள் அடிமைப்பட்டாள். இன்று அரசும் பிற நிறுவனங்களும் பெண் உரிமைகளையும் கடமைகளையும் பெறுவதற்கு சட்டங்களை உருவாக்கி செயற்படுத்தி வந்தாலும் ஒரு படி கீழ்நோக்கப்படுபவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஆரம்ப காலத்தில் இருந்தே சில சந்தர்ப்பங்களில் இன்று வரை பெண்களின் பங்களிப்பு சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்து வருகின்றது. சமூகம் ,அரசியல் ஆளுமை, சட்டங்கள் இயற்றுதல் போன்ற செயற்பாடுகளில் பெண்களின் பங்கு மதிப்புக்குரியனவாக உயர்ந்தால் எல்லாவித அறிவியல் வளர்ச்சிகளிலும் ஆண்களுக்கு சமமாக பெண்கள் திகழ்வர். அப்போது சமூகத்தில் நிலவும் பெண் அடிமைத்தனம் நீங்கி விடும் எனப் பாரதியார் கூறியுள்ளார். ஆரம்ப காலத்து மரபு வழிவந்த பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்து வந்தாலும் பெண்ணின் திறமை, முடிவுகளை அலசி ஆராய்ந்து எடுக்கும் சாமர்த்தியம் போன்ற திறமைகள் இருந்ததனால் பெண்ணிற்கு குடும்பத்தின் பொறுப்பு தரப்பட்டு உயர்ந்த நிலையில் நோக்கப்பட்டாள். வேதகாலத்திலும் பிற்பட்ட காலத்திலும் பெண்கள் தமது உரிமைகளை நிலைநாட்டி வாழ்ந்து காட்டினார்கள்.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் உயர்ந்து உள்ளனர். ஆணுக்கு நிகராக கல்வியறிவு, அரசியல் நிர்வாகம், பாதுகாப்பு என அனைத்து துறைகளிலும் பெண்கள் பங்கெடுத்துக் கொண்டுள்ளார்கள். பெண்ணின் சுகந்திரத்தையும் உரிமையையும் பேணும் வகையில் அவர்களின் முக்கியத்துவத்தை மதிக்கும் வகையிலும் இன்று ஐக்கிய நாடுகள் சபையினால் மார்ச் மாதம் எட்டாம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இன்று கல்வியானது ஆண் பெண் என்ற பேதம் இன்றி வழங்கப்படுகின்றது. கல்விகற்ற பெண்களை சமூகம் இன்று மதிக்கின்றது. பெண்கள் கல்வி பெறுவதற்கு உலக நாடுகள் எங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. படித்த பெண்கள் குடும்பத் தலைவியாகும் போது அவர்கள் பிள்ளைகள் போஷாக்கு கூடியவராகவும் கல்வி அறிவு பெற்றவர்களாகவும் உருவாகும் சந்தர்ப்பம் அதிகம் உண்டு.பெண்களின் கற்பு என்ற ஒன்றை வைத்து அவளின் பலவிதமான உரிமைகளை சமூகம் நசுக்குகின்றது. பெண்கள் கல்விக்கு ஏற்ப தொழிலை பெற்றிருந்தாலும் திருமண,குடும்ப வாழ்க்கை, குழந்தைபேறு என்பன அவளின் பதவி உயர்விற்கும் தொழில் மேம்பாட்டிற்கும் தடையாக உள்ளது. தொழில் சார்பாக இன்று பெண்களின் பங்கு குறைவாக

காணப்பட்டாலும் எதிர்காலத்தில் பெண்களின் தொழில் உலகம் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே பெண்களுக்கான கல்வியை வழங்குவதன் ஊடாக குடும்பம் நாடு எனப் பல்வேறு மட்டங்களிலும் சிறப்பான வாழ்வியல் முறை தோன்றி பொருளாதார முன்னேற்றமடையும் என்பது நிரூபணம் ஆகின்றது. எனவே இன்றைய சூழலில் பெண்களுக்கான கல்வி இன்றி அமையாத ஒன்றாகவே உள்ளது.

**ஞானசேகரம் கலையரசி**
**கலைப்பிரிவு**

## முழங்காவில்

மின்னாமல் முழங்காமல்
இடி விழுந்து ஊற்று
உருவாகிய பெயராம் முழங்காவில்!
முழங்கால் உயர நீர் தங்கி நிற்கும்
குளமாம் முழங்காவில்
வந்தோரை வாழவைக்கும் வன்னி மண்ணில்
வந்தோரை முழுமையாக வாழ வைத்தது
எங்கள் முழங்காவில்
குழாய் கிணற்று நீரில் எங்கள்
குடிகாத்த பூமியே
எங்கும் என்றும் பசுமை நிறைந்த
எங்கள் தாயே!
கல்வி கலை கலாசாரத்திலும்
பக்தி நெறியாலும் முழுமை பெற்ற
எங்கள் முழங்காவிலே
இது போல் என்றும் சிறப்புடன்
மேலும் வளர்ச்சியடைக...

**வ.அபிசா**
**தொழிநுட்பப்பிரிவு**

# முழவம்

தமிழ் இசைக்கருவிகளுள் ஒரு முக்கிய இடத்தை பெறுவது முழவம் எனப்படும் வாத்தியம் ஆகும். இது தமிழரின் இசைச் சிந்தனையின் ஒரு அடையாளமாகவும் கலாசாரத்தின் ஓர் அடையாளமாகவும் உள்ளது. சங்க காலத்தில் இருந்தே பயன்படுத்தப்பட்டு வரும் முழவம் தமிழர்களின் அரசியல், சமய, இலக்கிய கலையரங்க நிகழ்வுகளில் முக்கிய பங்கு ஆற்றியது. இந்தக் கருவி சினம், வீரக் கொண்டாட்டம், புலம்பல் ,தெய்வ வழிபாடு எனப் பல்வேறு மனோநிலைகளை பிரதிபலிக்கின்றது.

முழவம் பண்டைய தமிழகத்தின் இசைக்கருவிகளில் முதன்மையானது. சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு போன்ற நூல்களில் முழவம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதனை ''முழங்கும் முழவம் போல அவன் குரலும் வீரமாக இருந்தது!'' என்ற செய்யுள் அடியின் மூலம் முழவத்தின் பழமையையும் பரவலான தன்மையையும் காணமுடிகின்றது. சங்ககால தமிழர்கள் போர்களுக்குச் செல்லும் முன் வீரர்கள் முழவம் ஒழிக்கச் செய்து உணர்வை எழுப்பினார்கள். தேவாரத் தொண்டர்களின் சைவ சமய இசையிலும் இதன் பங்கு குறிப்பிடத்தக்கது. இது பறை, தண்டி, தாளம் போன்ற கருவிகளுடன் சேர்ந்து வாத்திய குழுவின் முக்கியமான வாத்தியமாக விளங்கியது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் முழவம் பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

முழவம் எனும் இசைக்கருவி இடுப்புத்தோலுடன் கட்டப்பட்டு நடுவே இலையின் கட்டமைப்பை போன்ற நிலையில் உள்ள ஒரு வட்ட வடிவ மிருதங்கம் போன்ற கருவி. இது மரத்தாலும் சில சமயங்களில் உலோகத்தாலும் செய்யப்படுகின்றது. விழுப்புரத் தோல்களும் ஒவ்வொரு விதமான ஒலி வெளியிட கூடியவையாக அமைக்கப்படுகின்றன.

''மணல் கொண்டு மணம் பூத்த முழவம் ஒன்று மறை கூற முடிவில்லா இசை போலவே முகில் ஒன்று வானம் சேரும்'' என்ற அழகிய கவிதையின் மூலம் முழவத்தின் அமைப்பு புலனாகின்றது. இடது பக்கதோலினால் தாழ் ஒலி வெளிப்படுத்தும் படி உள்ளது. வலது பக்க தோலினால் மெல்லிய ஒலி எழுப்பப்படும் வகையில் அமையப் பெற்றுள்ளது. முழவம் கயிறுகளால் அல்லது உலோக சங்கிலிகளால் இறுக்கி கட்டப்படுவதால் அதனுடைய ஒலி நுட்பமாக சீராக இருக்கின்றது. சில காலங்களில் அதனுடைய தோல்களுக்கு பசை, சுண்ணாம்பு போன்றவை பூசப்பட்டு அதற்கான ஒலிக்கேற்ற சீரமைப்பு செயயப்படுகின்றது. முழவம் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றது. அவற்றில் முக்கியமான முழவங்கள் பற்றி கீழ் வருமாறு நோக்குவோமானால் இருபுறமும் ஒரே அளவில் உள்ள தோல் அமைப்புடன் இருக்கின்ற முழவம் ''சமபாணி முழவம்'' என்றும் போர்க்களங்களில் வீரர்களுக்கு உற்சாகம் அளிக்க பயன்படுத்தப்படுவது ''வீர முழவம்'' என்றும் கோயில்களில் ஆராதனைக் காலங்களில் தேரோட்டம் போன்ற நிகழ்வுகளில் பயன்படுத்துவது ''கோயில் முழவம்'' என்றும் பஜனை குழுக்களில் இசைக்கப்படும் முழவம் ''பாகவத முழவம்'' என்றும் முழவத்தின் வகைகளும் பரவல் அடைந்து காணப்படுகின்றது.

முழவம் தமிழர் சமூகத்தில் பன்முகப் பாவனைகளுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. வீரநாதமாக முழவம் ஒலிக்க வீரர்களின் உளச்சோர்வு நீக்கப்பட்டு தன்னம்பிக்கை வளர்க்க போர்க்களத்தில் முழவம் பாவிக்கப்பட்டது. கோயில்களில் தீர்த்தத் திருவிழா ,தேரோட்டம் போன்ற சமய நிகழ்வுகளில் முழவம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் மூலம் சமய

வழிபாடுகளில் முழவத்தின் பயன்பாடு தெளிவாகின்றது. கலை நிகழ்வுகளில் நாடகம், ஒயிலாட்டம், கூத்து போன்ற நிகழ்வுகளில் முழவம் இசைக்கருவியாக பயன்படுத்தப்படுகிறது. மரண அனுஷ்டானங்களில் சில சமயங்களில் முழவம் ஒலிக்கப்படும். இதன் மூலம் முழவத்தின் பாவனை புலனாகின்றது.

முழவம் பற்றி சங்க கால இலக்கியங்களில் பல்வேறு குறிப்புக்கள் உள்ளன. புறநானூறு ,பத்துப்பாட்டு ,குறுந்தொகை போன்ற நூல்களில் முழவம் வீரம், துக்கம், பாசம் போன்ற உணர்ச்சிகளை வர்ணிக்க பயன்படுகிறது. உதாரணமாக ''முழவம் முழங்க முரசும் இசைத்த படையின் களியில் பரிவுடன்…'' இந்த வரிகளில் முழவத்தின் வீர உணர்வை எடுத்துகாட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரையின் மகளிர் பாங்கினை இசைக்கும் போது முழவம் ஒரு பாத்திரமாக வருகிறது. இதன் மூலம் தமிழ் இலக்கியங்களில் முழவம் பயன்படுத்தப்பட்டது புலனாகின்றது.

முழவக் கலைஞர்கள் மிகவும் திறமையான கலைஞர்கள் முழவம் வாசிக்க பயிற்சி எடுத்துக் கொள்வது ஒரு துறையாகவும் இருக்கின்றது. குறிப்பாக தென்னிந்தியாவில் சில இசைக்கல்லூரிகளில் முழவம் ஒரு பாடப்பிரிவாக கற்பிக்கப்படுகின்றது. நவீன தமிழகத்திலும் முழவம் அதன் பாரம் பரிய பாணியில் பயன்படுத்தப்பட்டாலும் சில சங்கீத வல்லுனர்கள் அதை நவீன இசைக்கருவிகளுடன் இணைத்து இசைக்கின்றனர். ''பொப்இசை பீட் இசை'' போன்ற இசை நிகழ்ச்சிகளில் கூட முழவம் புதிய வடிவங்களில் இடம் பிடிக்கின்றது.

முழவம் ஓர் இசைக்கருவி மட்டுமல்லாது தமிழர் வாழ்வின் மரபு கலாசாரம் ஆன்மீகம் ஆகியவற்றின் அடையாளமாகவும் விளங்குகிறது. ஒரு சமூக அடையாளமாக இன்று வரை நிலைத்திருக்கிறது. உலகத்தை பாதுகாக்கும் முயற்சிகள் தற்போது தமிழக அரசு. தனிநபர்கள் மற்றும் கலை நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழவக் கலைஞர்களுக்கு உதவித் தொகை மற்றும் பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. முழவம் என்பது தமிழரின் ஆன்மா அது இசை மட்டுமல்ல அது உணர்வுக்கு உரிய கருவி அதன் ஒலி அதன் தாக்கம் அதன் மரபு அனைத்தும் தமிழரின் வரலாற்றையும் கலாசாரத்தினையும் பிரதிபலிக்கின்றன. இதனை எதிர்காலத்திற்கும் பாதுகாத்து புதிய தலைமுறையினரிடம் பரப்பி முழவத்தின் ஒலியால் முழங்கி தமிழ் மொழியின் பெருமை பாதுகாத்து நிலைநாட்டுவோம்.

**அ.தமிழினி**
**கலைப்பிரிவு**

# பள்ளிப் பருவம்

குழந்தை பருவத்தில் தாயின் அரவணைப்பிலும் தந்தையின் பாதுகாப்பிலும் அவர்களின் கைகளிற்குள் அடங்கிய நாம் பள்ளி செல்ல ஆரம்பிக்கும் போது அழுகையுடன் சென்று அங்கு ஆசிரியர்களிடம் தாய் தந்தையின் அன்பை உணர்ந்து சிறிது சிறிதாக பள்ளி மீது விருப்பம் வரத் தொடங்கி கள்ளத்தனம் இல்லாத குறுப்புத்தனங்கள் மற்றும் சேட்டைகளை ஆரம்பித்து நண்பர்களுடன் விளையாடி மகிழ்ந்து அந்த குழந்தை வயதில் அழகிய நினைவுகளை மறக்கத்தான் முடியுமா? இல்லையேல் அந்த பொன்னான பருவம் மீண்டும் கிடைக்குமா? எல்லோருடைய உண்மைதானே எல்லோர் மனதிலும் என்றேனும் ஒருநாள் பள்ளிப்பருவம் மீண்டும் கிடைக்குமா? என்ற எண்ணம் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்கிறது.

பள்ளி வாழ்க்கையின் ஆரம்ப நாட்கள் எப்போதும் சுவாரசியமாகத் தானே இருக்கும் புதிய நண்பர்கள் புதிய ஆசிரியர்கள் மற்றும் மனதில் ஆசையையும் ஆர்வத்தையும் ஊட்டுகின்றன. அப்போது இருந்த அக்கறையற்ற சிரிப்புகள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாத வாழ்க்கை எதிர்கால கனவுகள் சிறு சிறு சந்தோசங்கள் என அனைத்தும் நாளைய நினைவுகளாக மாறுகின்றன. பள்ளியானது கல்வியை மட்டுமல்லாமல் ஒழுக்கத்தையும் நற் பண்புகளையும் நட்பினையும் அனுபவங்களினையும் வெற்றிகளையும் தோல்விகளையும் கற்றுத் தரும் ஓர் புனிதமான கோவில் என்று கூறுவதில் கூட தவறு ஏதும் இல்லை என்றே நான் நினைக்கிறேன் மேலும் பள்ளியில் நடைபெறும் தேர்வுகள் போட்டிகள் விழாக்கள் என அனைத்தும் நமது திறமைகளை வெளிப்படுத்த உதவுகின்றன. சிறு சிறு சண்டைகள் அதன்பின் புரிதல்கள் உணவு பரிமாற்றம் என்று பள்ளிப் பருவ நட்பானது வாழ்நாள் எல்லாம் நீடிக்கும். இவை ஒவ்வொன்றும் நம் மனதில் ஓர் அழியாத புனிதத்தை கிளப்புகின்றன.

பள்ளிப்பருவம் என்பது சிரிப்புகளின் சுரங்கம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை மழை பெய்யும் காலங்களில் கூரை மீதுமழைத்துளிகள் சத்தத்துடன் விழும்போது உள்ளே அமர்ந்திருந்த வகுப்பறை நினைவுகள். பள்ளிப் பருவம் இந்த சொல்லை சொன்னவுடனே நம் மனதில் ஓடும் நினைவுகள் எண்ணில் அடங்காதவை. அதுவே நம் வாழ்நாள் நினைவுகளில் முதன்மை இடத்தை பிடித்து நிற்கின்றது. பள்ளிதான் நம் முதல் உலகம் முதல் சந்தோசம் முதல் வலி முதல் நண்பர்கள் முதல் ஆசைகள் அனைத்தும் கற்றுத் கொடுத்த இடம் அம்மா! என்ற சொல் நம் உதடுகளில் ஒலிக்க ஆரம்பித்து போல ‘‘அ ஆ’’ எழுத்துக்கள் ஒலிக்க ஆரம்பித்து இன்று கனவுகளை நோக்கி செல்லும் அளவிற்கு நம் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளோம். காலை மணி அடிப்பதற்கு முன்னர் பள்ளிக்கு விரைந்து செல்லும் பயணம் ஆசிரியர்களை கண்டு பயப்படுவது அன்பு பெறுவது பரீட்சைநாட்களில் பதற்றம் விடுமுறை நாட்களில் வானொலி கேட்டு தூங்குவது அவ்விடுமுறைகாலத்தில் பள்ளி எப்போது ஆரம்பிக்கும் என்று ஏங்குவதும் பள்ளி சென்ற பின் எப்போது வீடு செல்லலாம் என்று எண்ணுவதும் நண்பர்களுடன் பகிர்ந்த மிட்டாய்கள் மனம் திறந்து பேச ஆரம்பித்த நாட்கள் என்று பாசம் கலந்த பள்ளிப் பருவம் உண்மையில் எவராலும் அழிக்கவோ அல்லது மறக்கவோ முடியாத நினைவுகள். இப்பொழுது கடந்த காலத்தை கவனித்தால் பள்ளிப் பருவம் என்பது கனவாகவே தோன்றுகின்றது. இப்பள்ளிப் பருவமானது மனம் கவர்ந்த நினைவுப் பயணம் அந்த பயணத்தின் இனிமையான வாழ்நாள் முழுவதும் தாங்கிச் செல்லும் ஆசையும் நன்றியும் நம்மில் திகழ்கின்றன. இறுதிநாள் நிகழ்ச்சிகள் ஒவ்வொருக்கொருவர் கடைசி முறையாக ஒன்றாக இருந்த அந்த தருணங்கள் மனதை உலுக்கும் அழுகைகள் எல்லாம்

மனதை கிழிக்கின்றன. இன்று வளர்து நின்றபோதுதான் பள்ளியின் உண்மை மதிப்பை உணர்கின்றோம். பணம் பதவி புகழ் எல்லாவற்றிற்கும் மேலாக பள்ளிப்பருவ நினைவுகள் இன்னும் நம்மில் வாழ்கிறது. பள்ளிப் பருவம் என்பது வாழ்க்கையில் ஒரே ஒருமுறை மட்டும் கிடைக்கும் பொக்கிஷம். ஆனால் இது முடிவல்ல இதுவே புதிய கனவுகளுக்கு வழிகாட்டும் ஒரு புதிய அத்தியாயம். இது பள்ளி பருவத்தின் முடிவுடன் பிறக்கும் வாழ்கை பயணத்தின் புதிய ஆரப்பம்.

**செ.பிறையினி**
**விஞ்ஞானப்பிரிவு**

## என் ஊரே

என் ஊரே என் ஊரே! எழில் நிறைந்த என் ஊரே!
முழங்காவில் என் ஊரே! முழு வளமும் நிறை ஊரே!
விவசாயம் பெருவளமே கடல் அலையும் தரை தொடுமே!
வனம் இங்கு காப்பு அரனே வண்ணமயில் வாழ்விடமே!
வித்தை தரும் ஆலயமே! நித்தமும் ஒளி தருமே!
வற்றாத நீர் ஊற்று தரும் எங்கள் முழங்காவில்
மண்ணோடும் வாழ்வுண்டு கடலோடும்வாழ்வுண்டு
முக்கனிகள் விளையும் நிலம் முயல்வோர்க்கு வாழ்வு தரும்
சித்தி தரும் நாயகனின் அருளிங்கு நிறைந்திருக்கும்
வளம் நிறைந்த என் ஊரே!
வணங்குகிறேன் என் ஊரே!

**பை. சிவதாரணி**
**கலைப்பிரிவு(2025)**

# இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்

பரந்த இந்த நிலவுலகிலே இறப்பும் பிறப்பும் சகஜம். வாழ்க்கை என்பது சுழல் சக்கரம் போன்று உருண்டோடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அவன் பிறக்கும் போதே நல்லவனாக மாசற்ற மனம் படைத்தவனாக பிறக்கின்றான். அவன் வளரும் போது பலவித வடிவங்களிலே வளர்ச்சி பெற்று நல்லவனாகின்றான். அறிஞனாகின்றான் உத்தமனாகின்றான் எனவே அவனது குழந்தை பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி இளைஞனாகி தலைவனாக மலர்கின்றான். இக் கருத்தினடிப்படையில் நோக்கும் போது இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்று ஏற்கக்கூடியதே ஆகும். இளைஞர்கள் அனைவரும் நாளைய தலைவர்கள் என்று கூறி விட முடியாது வளரும் பயிர் அதன் வளர்ச்சிப்பருவத்திலே பூச்சி புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்று கருகிப் போவதும் உண்டு அதே போன்று வளரும் பருவத்தில் இளைஞர்கள் அத்தகைய தாக்கத்தினை அடைய முடியாது நல்லவர்களாக ஒழுக்கமுள்ளவர்களாக வளர்க்கப்பட வேண்டும். கல்வியும் ஒழுக்கமும் இதற்கு அடிப்படையாக அமைவனவாகும். நல்ல கல்வியறிவினை பெறும் இளைஞன் நல்லொழுக்கம் உள்ளவனாக திகழ்வான். கல்வியும் ஒழுக்கமும் அமையப்பெறும் இளைஞர்கள் சிலரையும் நாம் காண முடிகின்றது.

இளமையிலே இலட்சிய நோக்குடனும் குறிக்கோளுடனும் வளர்வார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியை காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும் விடாமுயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்கு துணை செய்யும். இளைஞர்களை பொறுத்தவரையில் கல்லூரிகளில் கற்கும் காலத்திலேயே தலைமைத்துவ பண்புகளை கற்றுக்கொள்கிறார்கள்.மாணவர் மன்ற கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் போதும் விளையாட்டு மைதானங்களில் விளையாட்டு அணிகளுக்கு தலைமை தாங்கும் போதும் மாணவ தலைவராக செயற்படும் போதும் தலைமைத்துவ பண்புகளை பெற்றுக் கொள்கிறார்கள். அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையை காணலாம். அவர்கள் இளமைப் பருவத்தில் கொண்ட இலட்சிய வேட்கையை உலகம் போற்றும் தலைவர்களாக அவர்களை உருவாக்கியது என்பதை உணர்த்திட முடியம். மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், நெப்போலியன் போன்றோர் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

மனிதனாகப் பிறந்தவர் எவர்க்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் அற்றோர் மாண்டவர்க்கு சமமானவர் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ்வேன் என்ற இலட்சியமுடையவர்களே வாழ்வில் வெற்றி காண முடியும். குறிக்கோள் கொண்ட இளைஞர்கள் வாழ்வில் வெற்றி காண முடியும். குறிக்கோள் கொண்ட இளைஞர்கள் வாழ்வில் நன்னிலை பெறுவர் கெட்டவன் என்று பெயர் பெறுவது மிகவும் எளிது ஒரு சில நிமிடங்களிலேயே அப்பட்டத்தை பெற்றிடலாம். ஆனார் நல்லவன் என்ற பெயரினை பெறுவது மிகவும் கஷ்டம். எனவே இளைஞர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினை பெற முயல வேண்டும். நல்லவன் என மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் இளைஞர்களே நாளைய தலைவர்கள் ஆவது நிச்சயமாகும். எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாக ஒளிர வேண்டுமாயின் நல்ல கல்வியறிவும் நல்ல ஒழுக்கமும் பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவராக நல்ல குறிக்கோள் படைத்தவராக திகழ வேண்டியது மிக

அவசியமாகும். நாளைய தலைவர்களாகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்பதை மறக்கக்கூடாது.

**ச.சானுஜா**
**கலைப்பிரிவு**

## இளைஞர்களின் முன்மாதிரி கலாம்.

திரு A.P.J அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவில் பிறந்து தமழ்நாட்டிலேயே இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்தில் பிறந்தார் ''இளைஞர்களே கனவு காணுங்கள் இந்திய எதிர்காலம் உங்கள் கைகளில் தான் உள்ளது'' என்கின்ற வரியை இளைஞர்களுக்கு வழங்கி மறைந்த அப்துல் கலாம் அவர்கள் ஒரு இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்தவர் ஆவார். இவர் இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் ஏவுகணை தொழிநுட்ப விஞ்ஞானியும் ஆவார்.

இவர் ஜைனுல்லாதீன் ஆயிஷாமா தம்பதியினருக்கு மகனாக 1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி அவதரித்தார். இவர் நான்கு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரியுடனும் வளர்ந்து வந்தார். இவரின் தந்தையார் இராமேஸ்வரத்திற்கு வருகின்ற பக்தர்களை தனுஸ்கோடி என்ற இடத்திற்கு தனது சொந்த படகில் அழைத்து வரும் தொழில் செய்து வந்தார். இவரது குடும்பம் பூர்வீகத்தில் மிகவும் செல்வந்த குடும்பமாக இருந்தாரும் பின்னர் ஒரு வறுமை நிலையை அடைந்த குடும்பமாக காணப்பட்டது. அப்துல் கலாம் அவர்கள் தனது குடும்பத்தின் வறுமையால் தனது பள்ளி நேரத்திற்கு பின்பு செய்தித்தாள்களை விற்பனை செய்து வருமானம் ஈட்டி வந்தார். இவர் தனது பள்ளிப்படிப்பை முடித்து திருச்சி மாவட்டத்தில் உள்ள செயின்ட்யோசப் கல்லூரியில் இயற்பியல் துறையை கற்று 1954 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். அப்துல் கலாம் அவர்களுக்கு இயற்பியல் ஆர்வம் இல்லாமையால் விமானியாகும் தனது சிறுவயது கனவை அடைய முயற்சி மேற்கொண்டார். எனினும் விமானி ஆவதற்கான தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக எடுத்த காரணத்தினால் அவரின் கனவு நிறைவேறவில்லை. புின்னர் 1955 ஆம் ஆண்டு குரோம் பேட்டையில் MID தொழில் கல்வி நிறுவனத்தில் விண்வெளிப்பொறியியல் படித்து முடித்து அதே கல்லூரியில் முதுகலை பட்டத்தையும பெற்றார்.

1960 ஆம் ஆண்டு மத்திய அரசின் கீழ் இயங்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி நிறுவனத்தில் விஞ்ஞானியாக பணியில் சேர்ந்து அங்கு ஹோவர் கிராப்ட் எனப்படும் நிலம் நீரில் செல்லக்கூடிய வாகனத்தை உருவாக்கினார். பின்னர் இந்தியாவின் புகழ் பெற்ற விண்வெளி அறிவியளாளர் ஆன திரு.விக்ரம் சாராபாய் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் தலைமையின் கீழ் அப்துல் கலாம் அவர்கள் பணி புரிந்தார். அப்துல் கலாம் அவர்கள் 1963 முதல் 1964 வரை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் தலைமையகம் மற்றும் ஏனைய ஆய்வு தளங்களை பார்வையிட்டு இந்தியாவில் விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்தார். 1998 ஆம் ஆண்டு அப்துல் கலாம் அவர்களின் தலைமையில் மே மாதம் 11ம் திகதி ராஜஸ்தான் மாநிலத்தில் பொக்ரேன் எனும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அணுகுண்டு சோதனை அவரின் சாதனைகளின் மகுடமாக கருதப்பட்டது. 1997 ஆம் ஆண்டு மத்திய அரசு இவருடைய விண்வெளி ஆய்வு தேசிய பாதுகாப்பு மற்றும் ஏவுகணை தொழிநுட்பத்தில் அவர் ஆற்றிய பணிகளுக்காக ''பாரத ரத்னா'' விருது வழங்கி அவரை கௌரவித்து இந்தியாவின் பாதுகாப்பிற்காக இவரின் தலைமையின் கீழ் இயங்கிய விஞ்ஞானிகளால் 'அக்னி' மற்றும் 'பிரித்திவி' ரக ஏவுகணைகள் உருவாக்கப்பட்ட காரணத்தால் அப்துல் கலாமிற்கு **ஏவுகணை நாயகன்** என்கின்ற பட்டப்பெயர் வழங்கப்பட்டது.

அரசியலில் பெரியளவு ஈடுபாடில்லாத கலாம் அப்போதைய பிரதமர் திரு வாஜ்பாய் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2002 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேல்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று 2002 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக பதவி வகித்தார். சிறந்த புத்தக வாசிப்பாளரான அப்துல் கலாம் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையிலான பல்வேறு புத்தகங்களையும் எழுதியுள்ளார். 'இந்தியா 2020' 'எழுச்சி தீபங்கள்' 'ஒரு புதிய குழந்தை' 'என்னுடைய பயணம்' போன்ற பல புத்தகங்களை இவர் எழுதிய போதும் இவரின் புகழை எப்போதும் பறைசாற்றி கொண்டிருக்கும் புத்தகமாக திகழ்வது இவர் எழுதிய **"அக்னி சிறகுகள்"** எனும் புத்தகமே ஆகும்.

2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி மேகாலய தலைநகர் ஷில்லாங்கில் மத்திய அரசின் இந்திய நிர்வாக கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்த சிறிது நேரத்தில் உடல் நலக்குறைவால் மேடையிலே நிலை தடுமாறி விழுந்தார். அவரை சிறிது நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற சில மணி நேரத்தில் அப்துல் கலாம் காலமானார். ஜுலை மாதம் 30 ஆம் திகதி அவரது சொந்த ஊரான இராமேஸ்வரத்தில் இருக்கின்ற பேய் கரும்பு என்னும் இடத்தில் முழு அரசு மரியாதையுடன் இஸ்லாமிய மத சம்பிரதாயத்தின் படி அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. சிறுவயதிலிருந்தே எதையும் கற்றுக்கொள்ளும் ஆர்வம் மிகுந்தவர் ஆகவும் எளிமையாக இருப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இறுதி வரைக்கும் பிரம்மச்சாரி ஆக வாழ்ந்த அப்துல் கலாம் எதிர்கால இந்திய இளைஞர்களின் கையில் என்றும் கனவு காணுங்கள் அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள் எனும் வாக்கியத்தை இளைஞர்கள் மத்தியில் வேரூன்ற செய்தவர். அவர் இஸ்லாமியராக இருந்த போதும் சைவ உணவுகளை மாத்திரம் உண்ணும் பழக்கம் கொண்டிருந்தார்.

உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும் கவிதைகளாலும் வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

**S.தர்மீகன்**
**தொழிநுட்பப்பிரிவு (2025)**

# நான் வளர்ந்து பெரியவர் ஆகும் போது

துள்ளிக்குதித்து வரும்
என் பள்ளிப்பருவம் அதை
களிப்புடனே நான் கடந்து
பெரியராகும் போது

உண்மை தனை உணர்ந்திடுவேன்
உவகையுடன் நடந்திடுவேன்
அன்பு தனை புகட்டிடுவேன்
அவனி தனை மதித்திடுவேன்

கள்ளமில்லா மக்களை நான்
பணிவுடனே பேணிடுவேன்
கரவு கொண்டு நடப்பவரை
கண்டு நானும் ஒதுங்கிடுவேன்.

கால நதி ஓட்டம் அதில்
நானும் அந்த வாழ்க்கையிலே
நல்லவற்றை நான் உணரந்து
நானிலத்தில் வாழ்ந்திடுவேன்.

நல்ல பல கருத்துக்களை
சொல்லிவிட்டு எமக்கு முன்சென்ற
எம் இனிய சான்றோரை
என் வாழ்வில் ஏற்றிடுவேன்.

துன்பம் கண்டு துவண்டு விடாது
துணிவுடன் நான் இருப்பன்
கொல்லவரும் பகைதனையும்
மெல்ல நான் விலக்கிடுவேன்.

கற்றுத் தந்த ஆசானை
கடைசி வரை மறந்திடேன்.
கற்றுத் தந்த பாடங்களை
களிப்புடனே புகட்டிடுவேன்.

பள்ளிக்காலம் முடிந்தது
பருவங்களும் ஓடியது.
பழகிய நண்பர்கள் முகம் மாறியது
பழைய குணங்கள் இன்னும் மாறவில்லை.

உறவாக மட்டும் நான் பிறக்கவில்லை
உரிமையோடு கதை பயில்வேன்
பள்ளிப் பருவங்களும் பள்ளி நினைவுகளும்
இன்றும் என் கண்முன்...

**ச.தமிழ்ப்பிரியா**
**கலைப்பிரிவு(2025)**

# Clean Srilanka பற்றிய தகவல்கள்

‘‘கிளீன் ஸ்ரீலங்கா’’ திட்டம் என்பது சுத்தமானதாகவும் பசுமையானதாகவும் ஒழுக்கமானதாகவும் மாற்றும் நோக்கத்துடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஒரு தேசிய செயல்திட்டம் ஆகும். இது நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மறு சீரமைப்புக்கான ஒரு விரிவான அணுகுமுறையாகும். இந்தத் திட்டம் மூலம் பொது மக்கள் மத்தியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தல் கழிவுகளை முறையாக அகற்றுதல் பசுமைப் பகுதிகளை அதிகரித்தல் மற்றும் மக்களின் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தல் போன்ற செயல்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

‘‘கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. சுற்றுச்சூழல்
   கழிகளை அகற்றுதல் நீர்நிலைகளை பாதுகாத்தல் பசுமை பகுதிகளை உருவாக்கல் மற்றும் மாசுபாட்டை குறைத்தல் போன்ற செயல்களில் கவனம் செலுத்துகிறது.

2. சமூக மறுசீரமைப்பு ‘
   ஒழுக்கமான நடத்தைகள் சமூக நல்லிணக்கம் மற்றும் பொறுப்பான குடிமக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. மக்களின் பங்களிப்பு
   இத்திட்டத்தில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்பது முக்கியம் தனி நபர்கள், சமூக குழுக்கள், தனியார் நிறுவனங்கள், மற்றும் அரச துறைகள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

4. நிலையான அபிவிருத்தி
   சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன்களை பேணுவதன் மூலம் நாட்டின் நிலையான வளர்ச்சியை உறுதி செய்தல்

**‘‘கிளீன் ஸ்ரீலங்கா’’ திட்டத்தின் தாக்கங்கள்**

- சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைப்பதன் மூலம் மக்களின் ஆரோக்கியம் மேம்படும்
- பசுமையான பகுதிகள் அதிகரிப்பதன் மூலம் நாட்டின் இயற்கை அழகு பாதுகாக்கப்படும்.
- மக்களின் சமூகப்பொறுப்புணர்வு அதிகரிப்பதன் மூலம் சமூகத்தில் நல்லிணக்கம் மற்றும் அமைதி நிலவும்
- நிலையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் எதிர்காலம் பாதுகாக்கப்படுகிறது.

**“கிளீன் ஸ்ரீலங்கா” திட்டத்தின் சவால்கள்**

- திட்டத்தை முழுமையாக செயல்படுத்த போதுமான நிதி மற்றும் மனித வளம் தேவை.
- மக்களின் மனப்பான்மை மற்றும் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஒரு சவாலாக இருக்கும்.
- திட்டத்தின் வெற்றிக்கு அனைத்து தரப்பினரின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு அவசியம்.

கிளீன் ஸ்ரீலங்கா” திட்டம் இலங்கையின் எதிர்காலத்திற்கு ஒரு முக்கியமான செயல் திட்டமாகும். இந்தத் திட்டம் மூலம் நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகக்கட்டமைப்பை மேம்டுத்த முடியும். இந்தத் திட்டத்தின் மூலம் அனைத்து துறைகளையும் மறுசீரமைக்க முடியும். இத்திட்டத்திற்கு அரசாங்கத்தின் தொடர்சியான ஆதரவும் மக்களின் முழுமையான பங்களிப்பும் அவசியமாகும்.அடுத்த தலைமுறைக்காகவும் உலகை பாதுகாப்பாக மாற்ற நம்மையும் தமது சுற்றுச்சூழலையும் சுத்தமாகவும் சுகாதாரமாகும் வைத்திருப்பதை நோக்காகக் கொண்டு செயல்படுவோம்.

**கலைப்பிரியன்**
**தொழிநுட்பப்பிரிவு(2025)**

# நம் வாழ்வில் தொழில்நுட்பத்தின் பங்கு

இன்று உலகம் முழுவதும் மிக வேகமான வளர்ந்து வருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. நமது வாழ்விலும் தொழிநுட்பம் மிக முக்கியமான பங்கினை பெற்று விளங்குகின்றது. இது நம் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கி பலவகையில் நம் வாழ்க்கையை மேம்படுத்தி வருகின்றது. தகவல் தொடர்பு துறையிலே முதலில் தொழிநுட்பத்தின் பங்கு மிகுந்து காணப்பட்டது. உதாரணமாக நம்மில் பலர் இன்று மொபைல் போன்கள் இன்டர்நெட் போன்ற வசதிகளை பயன்படுத்தி உலகில் எங்கிருந்தாலும் ஒருவருடன் பேசுவதற்கும் தகவல்களினை பரிமாற்றிக் கொள்வதற்கும் இலகு முறையாக இது கணிக்கப்பட்டது. இது தூரத்தை குறைத்து மனிதர்களை இணைப்பதற்கு உதவுகின்றது.

கல்வித்துறையில் தொழில்நுட்பம் புதிய மாற்றங்களை ஏற்படுத்திஉள்ளதனை அவதானிக்கலாம் ‘ஆன்லைன் வகுப்புக்கள்’ ‘டிஜிற்றல் நூல்கள்’ மற்றும் ‘கல்வி செயலிகள்’ மாணவர்களுக்கு புதிய வகையில் கற்றலை அனுபவிக்கச் செய்துள்ளன. இதனால் மாணவர்கள் எப்போது வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானலும் கல்வியினை கற்றுக் கொள்வதற்கு இத்தொழில் நுட்பத்தினால் வசதிகளினை ஏற்படுத்தி கொடுக்க முடிகின்றது.

மருத்துவத்துறையில் தொழில்நுட்பம் பயன்படுத்துவதனையும் அவதானிக்க முடிகின்றது. நோய்களை விரைவாக கண்டறிய, சிகிச்சை அளிப்பதற்கு இத் தொழிநுட்பம் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. புதிய கருவிகள் இயந்திரங்கள் மற்றும் டிஜிட்டல் சிகிச்சை முறைகள் மனிதர்களின் வாழ்நாளை நீடிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர ‘எக்ஸ்ரே ஸ்கான்’ ‘MRI’ போன்ற கருவிகள் நோய்களை ஆரம்ப நிலையிலே கண்டறிய உதவுகின்றன. ரோபோடிக்ஸ் மற்றும் லேசர் தொழிநுட்பங்கள் மூலம் அறுவைச்சிகிச்சைகள் குறைந்த ஆபத்துடன் நடைபெறுகின்றன.

ஆகவே தொழில்நுட்பம் நம் வாழ்க்கையில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆனால் இதை நம் வாழ்வில் சரியாகப் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஏனெனில் தொழிநுட்பத்தினை தவறாக பயன்படுத்தினால் அது சமுதாயத்தில் பிரச்சினைகளினை உருவாக்கும் அபாயம் உள்ளது. தொழில்நுட்பம் நம் வாழ்க்கையை எளிதாக்கி விரைவாக்கி வாழ்க்கையின் தரத்தினை உயர்த்துகின்றது. அதனால் தொழிநுட்பத்தினை நன்மைக்காக பயன்படுத்தி வாழ்வில் முன்னேறுவோம்.

**அ. யேசுகாந்**
**தொழிநுட்பப்பிரிவு(2025)**

# கல்வியின் முக்கியத்துவம்

அறிவையும் அறிவீனத்தையும் சமப்படுத்த முடியாது அது போலவே கல்வி என்பது நம் வாழ்க்கையின் அப்படையில் ஒன்றாகும். ஒருவரின் வாழ்க்கை முன்னேற்றம் சமூக வளர்ச்சி நாட்டின் முன்னேற்றம் அனைத்தும் கல்வியால் தொடங்கி வழிநடத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும். இதுவே கல்வியின் சாராம்சமாகும். கல்வி இல்லாமல் நம்முடைய திறன் வெளிச்சத்திற்கு வருவது எளிதான விடயமாக கருத முடியாது. கல்வி நமக்கு அறிவையும் திறனையும் வழங்குகின்றது. பாடங்களை கற்றுக்கொண்டு நம்முடைய அறிவினை வளர்த்தெடுக்கின்ற பொழுது நாம் புதிய உலகங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுக் கொள்கின்றோம். இது நமக்கு சிந்தனைத் திறன் தீர்மானம் மற்றும் புதுமைகளை கண்டுபிடிக்கும் திறனை உருவாக்கி தருகின்றதனை நோக்க முடியும்.

கல்வி நம்மை ஒரு நல்ல வாழ்கைக்கு வழிகாட்டுகின்றது. நல்ல வேலை வாய்புக்கள் சமூக இடம் நல்ல சம்பளம் போன்ற அனைத்தும் கல்வி கற்றதன் மூலமே உயர்வாக கிடைக்கின்றது. கல்வியானது ஒரு மனிதனின் குடும்பத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் காண்பிக்கும் முக்கிய காரணியாக திகழ்கின்றது. கல்வி நம்மை நல்ல மனிதராக வளர்த்தெடுக்கின்றது. நெறிமுறை, பொறுமை, பொறுப்புத்தன்மை போன்ற பண்புகளை நம் மனதில் உள்ளே உருவாகின்றது. இதனாலேயே கல்வி கற்றவர்கள் சமுதாயத்தில் நல்ல மனிதர்களாகவும் உயர்வானவராகவும் போற்றப்படுகின்றனர். இவை தவிர கல்வி நம் நாட்டின் வளர்ச்சி அறிவியல் தொழிநுட்ப முன்னேற்றங்களில் முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

கல்வியினால் ஆணும் பெண்ணும் சம அளவில் மேம்பட முடியும். கல்வியின் ஊடாக ஊழலை எதிர்த்து நீதிக்கான குரல் எழுப்ப முடியும் இதனால் நாட்டு நலனும் உறுதி செய்யப்படுகின்றது. கல்வி மேம்பாடு என்பது நாட்டின் எதிர்காலத்தை வளமாக்கும் விதியான வழிமுறையாகும். எனவே கல்வி நமக்கு ஒரு வெளிச்சமாக வாழ்கையின் தரத்தை உயர்த்தும் கருவியாக கருதப்பட வேண்டும். ஒவ்வொருவரும் கல்வியின் மதிப்பை உணர்ந்து அதில் முழுமையாக ஈடுபட வேண்டும். அப்போதுதான் நமது வாழ்க்கையும் சமூகத்துடன் இணைந்து சிறப்பானதொரு வாழ்க்கையாக அமையும்.

**கோ.கொலிஞ்**
**தொழிநுட்பப்பிரிவு(2025)**

# ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி

இன்று மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்படும் இலக்கிய வகையாக சிறுகதை விளங்குகின்றது. இத்துறை காலம்தோறும் பல்வேறு அரசியல் பொருளாதாரச் சூழல்களினால் பாதிக்கப்பட்டு செம்மையும் பொலிவும் பெற்று வளந்துள்ளது.

ஈழத்து சிறுகதை இலக்கியம் இன்று தனிச்சிறப்பு பெற்று மிளிர்கின்றது. சிறுகதை தொகுதிகள் நாளுக்கு நாள் வெளிவந்த வண்ணமுள்ளன. வார இதழ்களும் சிற்றிதழ்களும் சிறுகதைகளை விரும்பிப் பிரசுரிக்கின்றன. இந்நிலையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியினை சிறிது நோக்குவோம்.

1930 ஆம் ஆண்டளவில் ஈழத்திலும் சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று மேலைநாட்டு இலக்கியங்களின் தொடர்பு தமழ்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளின் தாக்கம் இத்தகைய சூழ்நிலையினை உருவாக்கியது. ஈழத்து சிறுகதை இலக்கிய முன்னோடிகள் மூலவர்களாக போற்றப்படும் சி.வைத்திலிங்கம் இலங்கையர்கோன் சம்மந்தன் ஆகியோரின் கதைகள் ‘‘கலைமகள்’’ ‘‘கிராம ஊழியன்’’ பத்திரிகைகளில் வெளியாகின. இவர்களது கதைகளில் தமிழ்நாட்டு எழுத்தாளர்களான கு.ப.ரா.பிச்சமூர்த்தி சிதம்பர சுப்பிரமணியன் மௌனி ஆகியோரின் நேரடித் தாக்கமும் மேலைநாட்டு சிறுகதைகளின் பாதிப்பும் காணப்பட்டது. எனினும் ஈழத்து மண்வாசனை கிராமிய மக்களின் வாழ்க்கைச் சித்திரிப்பு பெருமளவு பிரதிபலிக்கின்றது.

1940-1850 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஈழத்தில் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் உருவாகி இலக்கியம் சமுதாயத்தை சீர்திருத்தவும் புதியதோர் சமூகத்தை உருவாக்கவும் பயன்பட வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் இவர்கள் தமது படைப்புக்களை வெளியிட்டனர். இக்காலத்தில் ஈழகேசரின் பங்களிப்பும் சிறுகதை வளர்ச்சிக்கு உதவியது.

அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், வரதர் (தி.ச.வரதராசன்), கனக செந்திநாதன், சொக்கன், சு.வேலுப்பிள்ளை, க.சிவகுருநாதன் போன்றோர் இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க சிறுகதை எழுத்தாளர்கள் ஆவார். தமிழகத்தில் ‘‘மணிக்கொடிக்காலம்’’ போன்று ஈழத்தில் இக்காலத்தை ‘‘மறுமலர்ச்சி பாலம்’’ எனவும் கூறுவார். 1945 ஆம் ஆண்டு ஆரம்பமான இந்த மறுமலர்ச்சி புதிய பல எழுத்தாளர்களை மட்டுமின்றி புதிய பல கருத்துக்களையும் அறிமுகப்படுத்தியது.

ஈழத்தில் 1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தமிழ் இலக்கியத்துறையில் பாரிய மாற்றத்தை உருவாக்கியது. 1956-1960 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டம் ஈழத்து தமிழ் சிறுகதை வளர்ச்சியில் முக்கியமானதோர் திருப்புமுனையாக அமைந்தது.

டொமினிக் ஜீவா, டானியல், எஸ் அகத்தியர், எஸ் பொன்னுத்துரை, செ. கணேசலிங்கம், என்.கே.ரகுநாதன், நாவேந்தன், பித்தன், சிற்பி, நவம், அ.முத்துலிங்கம், புதுமைப்பிரியை போன்றோர் இக்காலகட்டத்தில் துடிப்புடன் பல சிறுகதைகளை எழுதினர். 1970 காலப்பகுதியில் சிறுகதை எழுதத் தொடங்கியவர்களுள் திக்வளைகமால், லெ.முருகபூபதி, பொ.பத்மநாதன், எம்.எஸ்.இக்பால், ப.ஆப்டீன், அப்துல் ஸமது, சுதாராஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்.

எழுபதுகளின் பின்னர் இன்றுவரை பல்வேறு சிறுகதை எழுத்தாளர்கள் ஈழத்தில் உருவாகியுள்ளனர். இவர்களின் படைப்புக்களில் கருப்பொருள்கள் மிக விரிவும் கூர்மையும்

அடைந்துள்ளன. கிராம வாழ்க்கை நகர்ப்புற வாழ்க்கை இவ் இரண்டுக்கும் இடையிலான முரண்பாடுகள் மனித வாழ்வின் அவலங்கள் மற்றும் கண்ணில் படுகின்ற அனைத்தும் சிறுகதையில் பிரதிபலிக்கின்றன விமர்சிக்கப்படுகின்றன. தேசிய இனப் பிரச்சினை முனைப்புக் கொண்ட காலம் இதுவாகும்.

எண்பதுகளின் பின் படைக்கப்படும் சிறுகதையில் இன ஒடுக்கமுறையும் அதன் தாக்கங்களும் விடுதலைப்போராட்டங்கள் தொடர்பான நிகழ்வுகளும் முக்கிய இடம்பெற்று வருவதை காணலாம். இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை, பெண்ணிலை வாத செயற்பாடுகள் விடுதலை வேட்கை போன்றவற்றை மையமாகக் கொண்டே அனேகமாக சிறுகதைகள் இக்காலகட்டத்தில் வெளியாகி உள்ளன. 1980 இன் பின்னரான சிறுகதை எழுத்தாளர்களாக திருமதி கோகிலாமகேந்திரன், இணுவை சிதம்பர திருச்செந்தில்நாதன், சோ.ராமேஸ்வரன், சட்டநாதன், மு.சிவலிங்கம், தாமரைச் செல்வி போன்றோர் இன்று இவர்களில் சிலர் புகழ்மிக்க பல படைப்புக்களை தந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் இனுதிப் பகுதியில் பல்வேறு சிறுகதைத் தொகுப்பு நூல்களும் வெளியாகி உள்ளன. ‘‘மறுமலர்ச்சி’’ சிறுகதைகளின் தொகுப்பு ‘‘ஈழகேசரி’’ சிறுகதைகளின் தொகுப்பு ‘‘ஈழசேகரி’’ சிறுகதைகளின் தொகுப்பு என்பன குறிப்பிடத்தக்கதாகும்.

சுருங்கக் கூறின் தமிழ்நாட்டிச் சிறுகதை எழுத்தளர்களை விட ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புக்களில் சமுதாயப்பார்வை கூர்மை பெற்று விளங்குகின்றது எனலாம். இத்தகைய ஆரோக்கியமான சூழ்நிலையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பெருமைப்படத் தக்க வகையில் அமைந்துள்ளது.

**பா.சஞ்சித்**
**கலைப்பிரிவு(2025)**

## கல்வி

கல்வி என்பது மனிதனின் மூளைக்கும் நெஞ்சுக்கும் ஒளியூட்டும் ஒளிக்கதிர் போன்றது. மனித வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் வழிகாட்டும் சக்தியாக கல்வி விளங்குகின்றது. உணர்வுகளையும் அறிவையும் நேர்மையையும் வளர்க்கும் உயர்ந்த ஆயுதம் கல்விதான். ஒரு நபரின் கல்வி அவருக்குள் உருவான அறியும் திறனை யாரும் சுரண்ட முடியாது. ‘‘பசித்தவனுக்கு மீன் கொடுக்காதே மீன் பிடிக்க கற்றுக்கொடு’’ என்பதுபோல கல்வி மனிதனை தனக்காகவே வாழும் திறனுடன் உருவாக்குகின்றது. மாற்றத்தை உருவாக்கும் கல்வி, இன்றைய உலகத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சி, மருத்துவ முனனேற்றம், எல்லாவற்றிற்கும் அடிப்படை கல்விதான் ஆனால் கல்வி என்பது தேர்ச்சி பெறும் சானிறிதழ் மட்டுமல்ல. ஒரு நபரின் எண்ணம், திறன், மொழி, ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பை வளர்க்கும் ஒரு பயணம்.

மாணவர் கல்வியை வெறும் புள்ளி எண்ணிக்கைகளாக பார்க்காமல் வாழ்க்கையின் அடித்தளமாக பார்க்கவேண்டும். படிப்பு என்பது ஒரு போட்டி அல்ல. அது ஒரு பயணம் ஒவ்வொரு புத்தகமும் புதிய உலகத்தை காட்டும் கதவாக இருக்கிறது. அந்த கதவுகளை திறப்பது மாணவர்களது முயற்சியால் மட்டுமே சாத்தியம்.கல்வி என்பது ஒரு தீபம் தீபத்தை எரிய வைத்து பிறர் வாழ்க்யையிலும் ஒளிர விடும் பொறுப்பும் நம்மிடமே இருக்கிறது. வெறும் அறிவாளி இல்லாமல் நல்ல மனிதனாக உண்மையான கல்வியின் நோக்கம்.

**சுறோமிகா**
**கலைப்பிரிவு(2025)**

## விடாமுயற்சி-சிந்தனைத்துளிகள்

- நாம் வெற்றிக்காக போராடும் போது அதனை வீண் முயற்சி என்று சொல்வார்கள். அதுவே நாம் வெற்றி பெற்றி பின்னர் விடாமுயற்சி என்பார்கள்.
- நேரங்கள் வாய்ப்பை உருவாக்குவதில்லை முயற்சி தான் வாய்ப்பை உருவாக்கும்.
- முயற்சி செய்தேன் தோற்றுவிட்டேன் என்று எண்ணாதீர்கள் நீங்கள் முயற்சி செய்து அது தோற்றுவிட்டால் நீங்கள் அதைவிட இன்னும் உயர்ந்த பதவியை அடைய ஒரு பயிற்சியாக தான் இருக்குமே தவிர ஒருபோதும் தோல்லியாக இருக்காது.
- முயற்சி என்ற பயிற்சி நம் முன் வந்தால் வெற்றி என்னும் செல்வம் நம்மை தேடி வரும்.
- அலையென முயற்சி செய்தால் கடலென நிறைவான வெற்றியினை காண முடியும்.
- முற்றுப்புள்ளியைக்கூட மூன்று முறை வைத்தால் தொடர்ச்சியாக்கிவிடும். அதேபோல் முயற்சித்துக் கொண்டே இருந்தால் நம் வாழ்க்கை வளர்ச்சி ஆகிவிடும்.
- தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தால் ஒரு நாள் தோல்வி கூட உம்மிடம் தோற்றுப் போகும்.
- எதை இழந்தாலும் முயற்சியை மட்டும் நாம் இழந்து விடக்கூடாது.
  ‘‘வென்றால் மகிழ்ச்சி தோற்றால் பயிற்சி தொடரட்டும் முயற்சி’’

**தனுசியா**
**கலைப்பிரிவு(2025)**

# இன்னொரு தந்தையாகிய தம்பி

என் அன்னையின் பிரசவநாள் அன்று
துள்ளிக்குதித்து மருத்துவமனைக்கு போனேன்
கள்ளமில்லா வெள்ளை உருவத்தை
அள்ளி அணைத்து பிஞ்சுக் கரங்களை பற்றிப் பிடித்தேன்.

கண்ணை சிமிட்டியபடி என்னை பார்த்தான்
அவன் பார்வையில் எத்தனையோ அர்த்தங்கள்
என்காதோரம் கவி பாடிச்சென்றன
மெல்ல அடி எடுத்து அவன் பாதம் தரையில் பதிக்க
என் கரம் கோர்த்த ஞாபகம் என்றும் கனக்குதடா!

தொட்டிலில் போட்டு தாலாட்டு பாடி
உன்னைத் தூங்க வைத்ததும்
வட்ட நிலா காட்டி சோறூட்டி உன்னை வளர்த்ததும்
கண்முன் கரையாது நிலைத்ததடா!

நாள்தோறும் நீ கண்ணை கசக்கி -என்
கைகோர்த்து பள்ளி வருவாய் -உந்தன்
பால் வெள்ளை சிரிப்பு -எந்தன்
கடு மனதையும் கரைக்கும் மருந்தானதடா!

நல்ல கல்வி நீ பெற வேண்டுமென்றே
நாள்தோறும் நாம் காணாத தூரம்
உன்னை பிரிந்து இருந்தோம் -பிரிவின்
உளப்பாடு அறியாத நீ -பின்னொருநாள்
எண்ணினாய் எந்தன் செயலை.

உயர்கல்வி முடித்து நீ -எம்மோடு
உறங்கும் வேளையிலே -குடும்பச்
சுமைதான் உன்னை தொலைதூரம் துரத்தியது
மனங்கள் பாரமாக கண்கள் ஈரமாக -நீ
சென்றாய் அந்நிய நாட்டிற்கு.

இன்னொரு தாயாய் உன்னை தாங்க
தவமிருந்தேன் நான் முந்திக் கொண்டவனாய்
எனைத் தாங்கும் இன்னொரு தந்தை ஆனாய் -தம்பி நீ...

.

**ஜெ.தர்மிகா**

**ஆசிரியர்**

# மாசு

இறைவன் தந்த கொடையே!
இயற்கை நிறைந்த சூழல்
இதனை உரைக்க தொடுத்த
இதுவே என் கவி வரிகள்

சுற்றமெங்கும் வனப்பு -இதை
சுட்டெரிக்கும் மனிதன்
சற்றும் துயரம் இன்றி மண்ணை
சாம்பலாக்கும் எண்ணம்

சுயநலம் கொண்ட மானிடா!
சுழலும் பூமி உனக்கு மட்டுமோ?
சின்னஞ்சிறிய உயிர்கள் -அதை
சிதைக்கும் உந்தன் செயல்கள்

சுவாசிக்கும் மூச்சுக்காற்றிலும்
விஷவாயு சேர்வது நியாயமோ?
சுமை என எண்ணும் அளவுக்கு
சுவாசப்பையில் நோய்கள் வேண்டுமா?

நாளொன்றிற்கு நாற்பதுலட்சம் வாகனங்கள்
நாசமளிக்கின்றது நற் சூழல்தனை
இதமென எண்ணிய குயிலிசை
இதை முற்றுமே அளித்திட்ட இரைச்சல்

தாகம் தீர்ந்திடும் தண்ணீரிலும்
தரம் கெட்ட இரசாயன சேர்வையோ?
சிறிய இனம் பெரிய இனம் முற்றிலும்
சீரழப்பது தான் உன் திட்டமோ?

பொலித்தின் பிளாஸ்டிக் அனைத்திலும்
பிறப்பிலும் இறப்பிலும் நரகமோ?
சுவைகருதி உண்ட பின்
சுமக்கும் மாடுகள் இறப்பதோ?

வளங்களை வாரி எடுப்பதால்
வளம்பெறச் செய்கிறாய் நாட்டினை.
நிலம் நீர் மாசடைந்த பின்
நிலைபெற்றிருக்குமோ இந்த பூமியே!

கருவென உன்னைக் காத்திடும்
கண்ணான இயற்கை அன்னையை
காதலிக்காமல் இருப்பது கூட தவறல்ல.
கருணையின்றி அழிப்பது தர்மமோ?...

**வி.சுஜிபா**
**கலைப்பிரிவு(2025)**

# செயற்கை நுண்ணறிவு பற்றிய பார்வை

இன்றைய காலகட்டத்தில் அதிக பேசு பொருளாக மாறி உள்ள விடயம் ''செயற்கை நுண்ணறிவு ''(Ai தொழிநுட்பம்)'' ஜோன் மேர்கர்த்தி என்பவரால் பி.பி 1956 ஆம் ஆண்டளவில் செயற்கை நுண்ணறிவு என்னும் சொல் அறிமுகப்படுத்தப்பட்டது. இயற்கை மனிதனுக்கு கொடுத்த வரம் சிந்தனையாற்றல். அதேபோல் மனிதன் இயந்திரங்களுக்கு வழங்கிய சிந்திக்கும் ஆற்றல் செயற்கை நுண்ணறிவு ஆகும். துரமாக செயலாற்றக்கூடிய கருவிகளை உருவாக்குவதை நோக்கமாகப் கொண்ட கணினி அறிவியலின் ஐந்தாம் தலைமுறையின் ஒரு பிரிவு இதுவாகும். மனிதனைப்போல சூழ்நிலைகளையும் வழங்கப்படும் கட்டளைகளையும் உணர்ந்து அதிகம் வெற்றி அளிக்கும் வகையில் முடிவுகளை எடுக்கக்கூடிய நுண்ணறிவையும் பகுத்தறிவையும் கொண்ட இயந்திரங்களை(Robots&Mechines) உருவாக்குவதே தொழிநுட்ப வளர்ச்சியில் அடுத்த கட்டம் என ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர்.

நவீன உலகில் பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்பாற்றி வருகிறது. உயிர் காக்கும் தேவையான மருத்துவத்தில் நோயைக் கண்டறிதல் அவற்றுக்கான சிகிச்சைகள் போன்றவற்றில் முக்கியமான முடிவுகளை எடுக்க உதவுகின்றது. உதாரணமாக புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கான கதிரியக்க அறுவை சிகிச்சைகளில் பின் விளைவுகளை குறைக்கும் வகையில் நோய் பாதித்த பகுதிகளில் மட்டும் அறுவைச்சிகிச்சை மேற்கொள்ள AI தொழிநுட்பம் அளப்பறிய பங்காற்றுகிறது மருத்துவத்துறை மட்டுமல்லாது இயந்திரவியல் (Robots), தொடர்பாடல், தானியங்கி உற்பத்தி, இராணுவப்பாதுகாப்பு, கைத்தொழில் போன்ற பல்வேறு துறைகளிலும் முக்கியத்துவம் பெறுகிறது. விண்வெளி ஆராய்ச்சி போன்ற அதிக செலவினங்களின் மேற்கொள்ளப்படும் ஆராட்சிகளில் வெற்றியின் சாத்தியத்தை அதகரிக்க செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது. மனித தவறுகளை குறைக்கும் வகையிலும் மனிதவேலை வலுவினை குறைக்கும் வகையிலும் தானியங்கி இயந்திரங்கள் பல்வேறு துறைகளில் பயன்படுகின்றன. இதனால் உடல் உழைப்பினை மூலதனமாகக் கொண்ட மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகும். என்றாலும் எதிர்வரும் ஆண்டுகளில் AI தொடர்பாகன அறிவை கொண்ட பல்வேறு வேலை வாய்புக்கள் உருவாகும் எனக் கூறப்பட்டுகிறது.

மனிதனின் செயற்கையான கண்டுபிடிப்பால் கிடைக்கும் நன்மைகளுக்கு ஈடாக தீமைகளும் அமைந்துள்ளன. அந்த வகையில் செயற்கை நுண்ணறிவின் அடுத்த பரிமாணம் என்பது பன்மடங்கு தீமையை தரக்கூடிய ஒன்றாகும். 2015 ஜனவரி மாதம் Future of life கல்வி நிர்வாகத்தால் ஆராட்சியாளரான ஸ்டீபன் ஹாக்கிங் மற்றும் Tesla,Space x நிறுவனங்களின் உரிமையாளரான **எலான் மஸ்க்** என்பவரை உள்ளடக்கிய குழுவினரால் வெளியிடப்பட்ட ஒரு கடிதத்தில் ''மனித நேயமற்ற செயற்கை நுண்ணறிவு மனித வர்க்கத்தையும் அழிக்கக்கூடும்'' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு குறிப்பிட்ட எலான் மஸ்க் என்பவரே 2023 ஆம் ஆண்டு XAI ஐ நிறுவி Grok என்னும் செயலியை வெளியிட்டுள்ளார்.

''செய்கை நுண்ணறிவு முழு மனித இனத்தின் அழிவுக்கும் வழிவகுக்கும்.'' என்று open AI இன் தலைமை அதிகாரி **சாம் ஆல்ட் மேன்** Google இன் Deep Mind நிறுவனத்தின் தலைமை அதிகாரி டெமிஸ் ஹஸ்ஸாபிஸ் அவர்களும் கூறுகின்றனர். இவ்வாறன கருத்துக்கள் மக்கள் மத்தியில் எச்சரிக்கையை ஏற்படுத்தினாலும் AI தொழிநுட்பத்தின் தொடர் வளர்ச்சி நிறுத்த முடியாத ஒன்றாகும். மனித குல அழிவை தடுக்க அணு ஆயத போரினை தவிர்க்க எவ்வாறு

முக்கியத்துவம் அளிக்கப்பட்டதோ அதுபோல AI இன் பாதிப்பை தடுக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. AI தொழிநுட்பத்தின் உதவியுடன் உருவாக்கப்படும் தகவல்கள் சமூகத்தை சீர்குலைத்து எதிர்மறையான எண்ணங்களை உருவாக்கியுள்ளதை காண முடிகிறது.

தற்போது AI தொழிநுட்பத்தை சார்ந்து இருக்கும் மனிதர்கள் எதிர்காலத்தில் Ai 231-க்கு அடிமையாகி விடுவார்கள். மனித மனம் தொடர்ந்து ஆசைப்படக்கூடியது. அத்தகைய மனதை ஒரு கருவி பயன்படுத்த முடிதல் என்பது மனிதன் தன்னையே இயந்திரத்திடம் ஒப்படைத்ததற்கு சமம். வேதங்கள் ‘‘தன்னை அறிவதே சிறந்த தவம்’’ என்கின்றன. தலைசிறந்த சிந்தனையாளர் ஆன சோக்கிரட்டீஸ் ‘‘உன்னையே நீ அறிவாய்’’ என்ற தன்னுடைய வாழ்க்கை சித்தார்ந்தத்தை உலகுக்கு கூறினார். தமது மனம் சொல்லும் உபாயத்தை உணர்ந்து அதன் வழி நடப்பதே இன்பமான வாழ்விற்கான அர்த்தம். அவ்வாறு இருக்கையில் ஒரு செயற்கையான நுண்ணறிவுக்கு நம்மை செயற்படுத்துவது அடிமைத்தனமாகும். நமது மனமும் அறிவோ நம்மால் உருவாக்கப்பட்ட எதுவானலும் அடக்கி ஆள்வதே வெற்றியாகும்.

எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்பும் மனித வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். வாழ்வதை இலகுவாக்குதல் எனக்கூறி நம்மை நாமே சோம்பேறிகள் ஆக்கி விடக்கூடாது. எளிமையான வாழ்க்கைக்கு நாம் பழகிக் கொள்வதன் மூலமும் தொழிநுட்பங்களை முறையாக கையாள்வதற்கான அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் இதுபோன்ற செயலித் தொழிநுட்பங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும். செயற்கைக் கண்டுபிடிப்புகளுக்கு நம்மை பலியிடுவதை விட இயற்கையின் கீழ் பாதுகாப்பாக உடல் உள ஆரோக்கியத்துடன் அடுத்த தலைமுறையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**குறிப்பு:** தொழிநுட்பம் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள் இணையத்தளங்கள் ஆக்கங்களில் பெறப்பட்ட தரவும் தொகுக்கப்பட்டு இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

**மோ.கிரித்திகன்**
**விஞ்ஞானப்பிரிவு(2025)**

# தன்னம்பிக்கை

எவ்வேளையிலும் மேகம் போர்வை போர்த்தினாலும்
வெளியில் வரும் சந்திரன்
உன் வெற்றியை யார் தடுத்தாலும்
உனக்குள் இருக்கும் தன்னம்பிக்கை
உன்னை உயரத்தில் கொண்டு செல்லும்

விதைகள் மண்ணில் புதைத்தால் -தான்
விருட்சங்கள் மேல்நோக்கி வளரும்
விதையென விழு எழும்போது
விருட்சமாய் எழு

உனக்கு முன்னால் செல்பவனை பார்த்து ஏங்காதே
தாழ்வு மனப்பான்மை வரும்
உனக்கு கீழே உள்ளவனை ஏளனமாய் பார்க்காதே
தலைக்கனம் வந்துவிடும்.

உன்னை யாரோடும் ஒப்பிடாதே
நீயாகவே இரு தன்னம்பிக்கை வரும் மனதில்
தோல்விகளை கண்டு அஞ்சாதே
ஓடிக்கொண்டே இரு.

ஓடும்போதே நிமிர்ந்து பார்..!
உன் கைக்கு எட்டும் தூரத்தில் தான்
வெற்றியும் ஓடிக்கொண்டிருக்கும் பிடித்து விடலாம்
ஜெயித்து விடலாம் முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால்.

நாளை பொழுதில் எல்லாம்
மாறிவிடும் என்பது ‘‘நம்பிக்கை’’
எதுவும் மாறவில்லை என்றால்
சமாளிக்க முடியும் என்பது தான் ‘‘தன்னம்பிக்கை’’

தடை இருந்தால் பாதையை மாற்றச்சொல்
பயணத்தை நிறுத்தாதே.
ஓடும் நதிபோல் பாதையை உருவாக்கி
ஓடிக் கொண்டே இரு.

தனியாக உயரப் பறக்கும் பறவைக்கு
இருக்கும் நம்பிக்கை
உன் மீது உனக்கு இருந்தால்
நீயும் உயரலாம் இந்த பூமியை ஆளலாம்.

# நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்

''விலங்கோடு மக்களணையர் இலங்கு நூல்
கற்றா ரோடு ஏனையவர்'' என்கிறார் வள்ளுவர். கல்வியுடையவரே மனிதர் என்றும் கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளங்குகின்றது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மதிக்கும் என்பது புலனாகுகின்றது. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வியறிவினை பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொள்ள பல வழிகள் உண்டு. எனினும் அவற்றுள்ளே மிகச்சிறந்தது நூல்கள் மூலம் பெற்றுக்கொள்வதே ஆகும். நூல்கள் மூலம் அறிவை பெற்றுக் கொள்ளவேண்டுமாயின் நாம் நூல்களை நன்கு வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கெள்வதன் மூலம் அது சாத்தியமாகும். என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே'' என்றான் ஆங்கில கவிஞன் ஒருவன். இதனாலேயே அறிஞர்கள் நல்ல நூல்களை நண்பராக்கி கொள்ளுங்கள் என்று வலியுறுத்துகின்றார்கள்.
இளமைப்பருவம் இனியது. இப்பருவத்திலே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் ஏற்படுத்திக் கொண்டால் நமது மொழியாற்றல் விருத்தியுறும். பாடங்களிற் சிறப்படைய முடியும். வாழ்க்கை பூராகவும் நாம் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியைக் கண்டு கொள்ளலாம்.

நூல்கள் பலதரப்பட்டவை. வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைகதை, விளையாட்டு என பல்வேறு வகைப்பட்ட நுர்ல்கள் உள்ளன. இவற்றை நமது விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்து படிக்க வேண்டும். நமது எதிர்கால முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைக்கும் நன்மை தரும் நூல்களை அறிந்து கற்றல் வேண்டும். சோர்வு ஏற்படும் வேளைகளில் எல்லாம் நாம் நூல்களை துணையாகக் கொண்டால் வேறு துணை நமக்குத் தேவைப்படாது. இதனால் தான் ''புத்தங்களை போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது '' என்றார் ஆங்கில அறிஞர் ரங்கின்.

பொழுதுபோக்கிற்கு சில நூல்களை படிக்கிறார்கள். அத்தகைய நூல்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மடடுமே படிப்போருக்கு மகிழ்ச்சி அளிக்கின்றன. நமது உள்ளத்திற்கு நலம் தரும் நூல்களை நாம் தெரிந்து கற்க வேண்டும். நல்ல சிந்தனைகள் அடங்கிய நூல்களே நமது உள்ளத்திற்கு உகந்தவை ஆகும். நூல்களைத் தேடிக்கற்றால் அவை நமது வாழ்க்கைக்கு பயன் தரும். நாம் எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவுக்குஅவ்வளவு அறிவு விருத்தி அடையும் சொல்வளம் பெருகி மொழியாற்றலில் முதன்மை அடைய வாசிப்பு பெருந்துனை புரிகின்றது.

நமக்கு அறிவை புகட்டும் ஆசானாக அவை அமைந்திருக்கும் பொழுது அவற்றை நாம் பயன்படுத்த தவறக் கூடாது. நல்ல நூல்களை நல்ல நண்பர்கள் என உணர்ந்து நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வளரும் மாணவ சமுதாயத்தின் தலையாய கடமை இதுவாகும். ''இளமையிற்கல்வி சிலையில் எழுத்து'' என்பது முன்னோர் கூறிய அறிவுரை முதுமொழி இளமையிலே நாம் கற்றுக் தேற வேண்டியவையை கற்றுத் தேற வேண்டும். அதற்கு நல்ல நூல்கள் நமக்கு துணை செய்யும் இவ்வுலகில் வாழும் காலம் மிகவும் சிறியது ஆனால் கல்வியோ கரையற்றது.

‘‘கல்வி கரையில கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கிற் பிணி பல.... ’’ இன்று எடுத்துரைக்கின்றது நாலடியார். எனவே வாழும் நாளில் கரையற்ற கல்வியின் சிறிய அளவேனும் கற்றிட நாம் முயல வேண்டும். அதற்கு நல்ல நூல்களை நமது நண்பர்களாக்கிக் கொள்வதே நல்ல வழியாகும்.

‘‘ நல்ல நல்ல நூல்களே நமது நல்ல நண்பராம்.....
நல்ல நல்ல நூல்களை நாளும் நண்பராக்குவோம்... ’’

**ச.பானுஜா**
**கலைப்பிரிவு(2025)**

## <u>எங்கள் பாடசாலை</u>

இனிய நம் தாய் நாடாம்
இலங்கை தனிலே
வளங்கள் நிறைந்து காணப்படும்
கிளிநொச்சி மாவட்டத்திலே

இயற்கை அழகும் செழிப்பும் நிறைந்த
முழங்காவில் கிராமத்திலே
கடலில் முத்து போன்று கிடைத்த
எம் முழங்காவில் பாடசாலை

ஐம்பத்தி நான்கு ஆசிரியர்களையும்
எண்ணூற்றுக்கணக்கான மாணவர்களையும்
கொண்டு சிறப்போடு விளங்கும்
பாடசாலையே முழங்காவில் பாடசாலை

ஒன்பது கட்டடங்களை கொண்டு
முழுவரது அன்பினையும் பெற்று
சித்தி வீதத்தில் சிறப்புப் பெற்ற
பாடசாலையே முழங்காவில் பாடசாலை

பேதைகளான எம்மை மேதைகளாக
மாற்றும் ஆசிரியர்களைத்
தன்வசம் கொண்டுள்ள அழகுப்
பாடசாலையே முழங்காவில் பாடசாலை

முழங்காவில் பாடசாலை அன்னையே
உன் புகழ் மென்மேலும் உயர்ந்து சிறப்புற்று
உன் பணி பல்லாண்டு காலம் தொடர
உனை வாழ்த்துகிறேன்.

**பி.பபிசன்**
**கணிதப்பிரிவு(2025)**

# சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு

‘‘மங்கையாராக பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்மா’’ இன்று பெண்களின் பிறப்பை பெரும் பேறாக கருதிப் பாடினார் கவிமணி தேசிக கவிமணி விநாயகம் பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண் பங்கு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடம் உண்டு. முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்கு தனியிடம் அளித்துள்ளார் என்பதை சங்க நூல்கள் பறைசாற்றுகின்றன. ஔவையார்,காரைக்கால் அம்மையார் போன்ற பெண் பாற் புலவர்கள் பீடு பெற வாழ்ந்த வரலாறு உண்டு.

இறைவனது படைபப்பில் ஆண் பெண் இருபாலருமே சமமே ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் பேதைமை ஆகும். குறிப்பாக பெண்கள் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள். அன்பின். பண்பே பெண்மை. பெண் முதன்மையானவள் இதனால் தான் பெண்னை தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினார்கள். பெண்னை சக்தியின் வடிவமாக போற்றின சமயங்கள். வாழ்க்கைத் துணைவியாகவும் வாழவைக்கும் தாயாகவும் வழி நடத்திச் செல்பவளே பெண். அவளுக்கு நிகரான எடுத்துரைத்தல் இயலாது.

இத்தயைக சிறப்பு மிகுந்த பெண்னை இழிவுபடுத்தும் வேத விதிகளும், சமூக, மதக்கொடுமையும் இடைக்காலத்தே புகுந்தன. இதன் பேறாக போற்றி பேணப்பட்ட பெண்குலமே தாழ்வுற்றது. பெண்ணடிமை நிலைபெற்றது. வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைக்கும் வேதனை நிலை நிலை உருவாயிற்று. ‘‘அடுத்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு’’ என்றனர்.

சென்ற நூற்றாண்டு வரை இந்நிலை நிலவிற்று. பெண்ணடிமைத் தளைகளை தகர்த்தெறிந்து ஆணுக்கு இங்கே சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். ‘‘எட்டும் அறிவினில் ஆணுக்கு பெண் இளைப்பிள்ளைக் காண்’’ என்று அவர் முழங்கிய பின்னர் தான் பெண்ணுரிமை மலர தொடங்கியது. பெண்கள் விழித்தெழுந்தனர். மகளிர் வாழ்வில் புதிய ஒளி மலர்ந்தது. பெண் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

‘‘தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் கை’’ என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது நாட்டைப் பொறுத்த வரையில் பெண்களே இன்று முன்னிலையில் திகழ்கிறார்கள். ஜனாதிபதி முதல் உயர் நீதிமன்றம் வரை பல்கழைக்கழகங்கள் தொட்டு உள்ளூராட்சி சபைகள் வரை அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதை காணமுடிகிறது.
இத்தகைய சிறப்புக்களை பெண்கள் பெற்ற போதிலும் அவர்களது உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் சில நிகழ்வுகள் இன்னும் காணப்படுகின்றன. வரதட்சனை எனப்படும் சீதன கொடுமையால் கன்னியர் பலர் கண்ணீருடன் காலம் கழித்திடும் அவல நிலையும் உள்ளது. பெண்களை வெறும் போகப் பொருளாகவும் வியாபாரப் பொருளாகவும் சிலர் நடத்துவர். இந்நிலை மாற வேண்டுமாயின் சமூகம் விழிப்புணர்வு அடைய வேண்டும். சமூக பணியில்

பெண்கள் துணிச்சலுடன் ஈடுபடுவதன் மூலமே இக்கொடுமைகளை ஒழித்திட முடியும். நமது நாடு வளம் பெற நங்கையர் பெரும் பங்காற்ற வேண்டும்.

இன்று பெண்கள் தம் அறிவாலும் ஆற்றலாலும் உழைப்பாலும் முன்னேறி வருகின்றனர். ஆடவர்க்கு நிகராக சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்றனர். இத்தகைய மகளிர் பங்கு சமுதாய முன்னேற்ற பணிகளிலும் இடம்பெற வேண்டும். இதன் மூலம் மகளிர் வாழ்வும் சமுதாயமும் நாடும் வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

**சி.சுவர்ணா**
**கலைப்பிரிவு(2025)**

## <u>தலைமைத்துவம்</u>

தன்னலம் துறந்து பொதுநல போர்வை போர்த்து
போர்க்கள வீரன் பொறுமையை துறந்து
எண்ணத்தில் எளிமையும் நெஞ்சத்தில் வலிமையும்
நெம்பு எனக் கொண்ட நெறியே இந் நெறியாகும்.

தன்மையான தமிழராய் தரணியில் உயர்வதற்கு
தலைமைத்துவம் எனும் தத்துவத்தை தவமாய் -பெற்று
தன் உதயத்திற்கு உயர்வு கொடுக்கும் உண்ணத பணியே
உயர்ச்சிக்கு ஊன்று கோலாய் வாழ்விற்கு வழிகாட்டியாய்
வானத்து வான்குருவி முதல் மீகடலின் மீனினம் வரை
பயின்றெடுத்த பாடமே தலைமைத்துவம்.

தட்டிக்கொடுக்கும் தன்மையும் தத்துவத்தை தர்க்கமாய் அறியும் நுட்பத்தையும்
விமர்சனத்தின் விளைவையும் சமர்ப்பணத்தின் சாதுரியத்தையும்
தலைமைத்துவத்தை தலையாக மதித்து தலைக்கனத்தை விழலென புதைத்து
பூமியை புதுப் பொலிவோடு மாற்ற பூலோகத்தார் யாம் முனைப்புடனே.
வழிநடத்திட கற்றுத்தந்த பாடமே தலைமைத்துவம்...

# மாவீரன் நெப்போலியன்

உலக வரலாற்றில் அதிர வைத்த மாபெரும் உரு மாவீரனாக நெற்போலியன் மெனபாடடை குறிப்பிட முடியும். இவன் இத்தாலியில் உள்ள கோர்சிகா தீவில் அயோடியாப் என்ற கிராமத்தில் கி.பி 1796 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் 15 ஆம் திகதி கார்லோ மொனபாட்டிற்கும் ஜெருடியோ றமோவனாக்கும் மகனாகப்பிறந்தான். தன்னுடைய 11வது வயதில் பிரான்சில் கல்வி கற்க சென்று தன்னுடைய திறமையின் ஊடாக அந்த நாட்டின் இராணுவத்தில் இணைந்து கி.பி 1804 ஆம் ஆண்டு பிரான்சின் சக்கரவத்தியாக உயர்ந்து ஐரோப்பிய தேச முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து பிரான்சை ஒரு தலைமைத்துவமான பேரரசாக கட்டி எழுப்பினார்.

இரோப்பிய வரலாற்றில் நெற்போலியன் பொனப்பாட் பிரான்சின் சக்கர வர்த்தியாக உயர்ந்து பிரான்சை தக்கிறைவு பாதைக்குகொண்டு சென்றான். குறிப்பாக கி.பி 1769 ஆம் ஆண்டு இத்தாலியின் கோர்ச்சிகாவில் பிறந்த இவர் கல்வி கற்பதற்கு பிரான்சிற்கு வருகை தந்து பாரிஸ் நகரில் தன்னுடைய கல்வி செயற்பாடுகளை மேற்கொண்டு பிரான்சில் இருந்த காலப்பகுதியில் பிரான்சின் ஆதிக்கத்திலிருந்து கோர்சிகாவை விடுவிக்க வேண்டும் எனக் கூறி கோர்சிகா தீவினுடைய இயக்கத்திற்கு இரகசியமான முறையில் உதவி இருந்தார். ஆனாலும் பிரான்சின் இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்து அதில் சேர்ந்து பல்வேறு பயிற்சிகளை பெற்றிருந்தார்.

இராணுவத்தினுடைய உயர் பதவிகளைப் பெற்று கி.பி 1793 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் படைகளை தாக்கி துவான் துறைமுகத்தை விடுவித்ததுடன் கி.பி 1795 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபைக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியினை அடக்கி இருந்தார். 1796 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தாலியின் ஆதிக்கத்தில் இருக்கின்ற ஆஸ்திரியாவிற்கு எதிராக படை திரட்டி ஆஸ்திரியாவை தோற்கடித்து கி.பி 1797 ஆம் ஆண்டு ஆஸ்திரியாவுடன் கம்பொமியா உடன்படிக்கையினை மேற்கொண்டான் இவ் வெற்றியின் பின்னர் கி.பி 1798 இல் இங்கிலாந்தின் ஆதிக்கத்தை குறைப்பதற்காக எகிப்து மீது படையெடுத்து மோல்டாவை கைப்பற்றினார் இவ் வெற்றியின் பின்னர் பிரிகேடியர் பட்டம் வழங்கியதுடன் 1800 ஆம் ஆண்டு கொன்சுவர் பதவி பெற்றான். இப்பதவிக்காலம் 10 வருடங்காலாக வரையறுக்கப்பட்டடு இருந்தது. 1802 ஆம் ஆண்டு ஆயுமள் கவுன்சிலராக இருக்க மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டான். இதேபோல் கி.பி 1804 ஆம் ஆண்டு பிரான்சின் பேரரசனாக தனக்கத்தானே முடிசூடி கொண்டான்.
நெற்போலியன் பிரான்சை ஒரு தனி தேசமாக கட்டி எழுப்புவற்காக அரசியல், பொருளாதார, சமய சீர்திருத்தங்களை மேற்கொண்டான். இதன் அடிப்படையில் எழுச்சிப்படுத்தியமை நெற்போலியனை சாரும். இவன் பிரான்ஸ் முழுவதையும் 18 கொன்வியூன்களாகப் பிரித்து அதனை தன்னுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்ததுடன் ஆலோசனையும் அதிகாரமும் மிக்க கொன்சல் சபையை உருவாக்கி அதன் தலைவராக தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டான். மற்றும் 30 பேர்கொண்ட செனட் சபையை உருவாக்கி அதனை அரிசயலில் ஆலோசனை சபையாக செயல்பட வைத்ததுடன் 500 பேர் கொண்ட நட்ட மன்றம் ஒன்றை உருவாக்கி பிரான்சின் சட்டங்களை ஒழுங்குபடுத்தி இருந்தான். மற்றும் அரசியல் ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக 100 பேர் கொண்ட டிரினேற் சபையினை நிறுவி அரிசியல் ஒழுக்காற்றினை முறைமைப்படுத்தினான்.

நாட்டின் பாதுகாப்பில் அக்கறை கொண்ட இவன் இராணுவ கல்லூரியினை உருவாக்கி அவர்களுக்கு பயிற்சி அளித்ததோடு ஏராளமான இராணுவ வீரர்களை தன்னுடைய படையில்

இணைத்து கட்டளைப் படைகளை ஒழுங்குபடுத்தினான். கொன்வீரர்களுக்கு மேயர்களை நியமித்தான். பிரிக்கப்பட்ட பிராந்தியர்களின் பொறுப்புக்களை பிரிபெட் அதிகாரிகளிடம் ஒப்படைத்து உதவி பிரிபெட்களும் அமைக்கப்பட்டு சிறந்த நிர்வாக வலையை உருவாக்கினான்.

நெற்போலியன் பொனபாட் மேற்கொண்ட பொருளாதார சீர்திருந்தங்களினாலும் பிரான்சை வளப்படுத்தினான். குறிப்பாக பொருளாதார ரீதியாக பாரிய மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என பிரான்சில் ஒழுங்குபடுத்தப்பட்ட நாணய முறையை அறிமுகப்படுத்தி தன்னுடைய பெயரும் படமும் பொறித்த நாணயத்தை வெளியிட்டு நாணயத்தின் பெறுமதியை அதிகரித்தான். மற்றும் மக்களின் விவசாய தேவைக்காக திருச்சபையிடமும் பிரபுக்களிடமும் காணப்பட்ட நிலங்களை மீட்டு அதனை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கியதனால் பிரான்சில் எங்கும் விவசாய வளர்ச்சி அதிகரித்தது. அதிகளவு கைத்தொழில் வளர்ச்சிக்கு பங்காற்றியதோடு சீனி கைத்தொழில் பிற்ணட் கெத்தொழில் உருளைக்கிழங்கு கைத்தொழில் ஆகியவறடறை ஊக்கிவிப்பதோடு மக்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கினான்.

1800 ஆம் ஆண்டு பிரான்சில் வங்கி ஒன்னை நிறுவி வட்டி வீதங்களை குறைத்து விவசாயிகளின் கடன் வசதிகளை வழங்கி இருந்தான். அரசாங்கத்திற்கு வரி செலுத்துவது மக்களின் கடமை என்பதனை உணர்த்தி நீட காலமாக குறிப்பாக பத்து வருடங்கள் வரி அறவிடாதிருந்த வரிகளை அறவிட நடவடிக்கை எடுத்தான். தோல்வி அடைந்த நாடுகளிடம் இருந்து பெறப்பட்ட நட்ட ஈட்டுத் தொகையை தனி நிதியமாக பேணி அதனை போர் செலவுகளுக்காக பயன்படுத்தினான்.

நெற்போலியன் பொனபாட்சமய ரீதியாகவும் உள்நாட்டு சீர்திருத்தங்களை மேற்கொண்டான். திருச்சபையானது அரசியல் விடயங்களில் தலையிடக்கூடாது என கி.பி 1801 ஆம் ஆண்டு பாப்பரசருடன் கொன காட்டர் உடன்படிக்கையினை மேற்கொண்டு சமயத்தன்மையினை உறுதிப்படுத்தி இருந்தார். திருச்சபை இடம் காணப்பட்ட பணங்களை பறிமுதல் செய்து அதனை மக்களின் நிலங்களாக மாற்றியதுடன் திருச்சபையின் அலுவலகங்களை அரசு அலுவலகங்களாக மாற்றி இருந்தார். கத்தோலிக்க குருமார்கள் அரசியல் விடயங்களில் அதிக அளவு அதிகராம் உடையவர்களாக இருக்க முடியாது என கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக பிரான்சின் அரச மதம் கத்தோலிக்கம் தான் என்பதை எடுத்துக் கூறியருந்தனார்.

நெற்போலியன் பொனபாட்டினுடைய முக்கிய பணியாக நீதி தொடர்பான சீர்திருத்தம் ஆகும். ஆக்காலத்தில் நீதி முறைகள் குழப்பம் காரணமாக மக்கள் பூர்வ வம்ச மன்னர்களுக்கு எதிராக எதிர்ப்பை காட்டினார். நெற்பேலியன் பொனபாட்டின் காலத்தில் நாட்டிற்கு ஒரு நீதியும் நீதிக்கு முன் அனைவரும் சமம். ஏனக் கூறி உறுதி செய்தான்.

நாட்டில் நீதிமன்றங்களை உருவாக்கி உயர் நீதிமன்றத்திற்கு பிரதம கொன்சவை நீதிபதியாக நியமித்தான். அரச ஊழல்களை நிறுத்த அரச ஊழியர்களுக்கான நீதிமன்றங்களை உருவாக்கி ஊழல் செய்பவர்களை கடுமையாக கண்டித்ததோடு நெத்திரே க்கச்ச எனும் பிடிவிராந்த முறையை மீண்டும் அறிமுகம் செய்து அரசியல் கொள்கை மீறுவோருக்கு தண்டனை வழங்கப்பட்டது. நெற்போலியன் சட்டம் தொடர்பான கூற்றின்படி ''நான் நூறு போர்களில் வெற்றி பெற்றிருக்கலாம் ஆனால் நான் நாட்டிற்கென உருவாக்குகின்ற உன்னதமான சட்டமே என்னை வரலாற்றில் இறுதிவரை பேசவைக்கும்'' எனக் கூறி பிரான்சிய புரட்சி கருத்துக்களாக

‘‘சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்’’ ஆகிய கருத்துக்களை தன்னுடைய நீதியில் முதன்மையான கோட்பாடாக கடைப்பிடித்தார்.

நெற்போலியன் பொனபாட் உள்நாட்டு சீர்திருத்தங்களை மேற்கொண்டு பலமான வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்றினான். பிரான்சின் ஆதிக்கம் ஐரோப்பா கண்டத்தை அதிர வைக்கும் அளவிற்கு வெளிநாட்டு யுத்தங்களை மேற்கொண்டு இவர் தன் சொந்த நாடான பிரான்சில் வாழ்ந்ததை விட வெளிநாடுகளில் வாழ்ந்ததே அதிகம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

நெற்போலியனுடைய வெளிநாட்டு கொள்கை அதிக அளவில் போரில் முடிவடைந்தது. பிரான்சிய இராணுவ நெற்போலியன் தலைமையில் ஆக்கிரமிப்பு மேற்கொண்ட முதலாவது தேசம் ஆஸ்திரியா ஆகம். அதாவது இத்தாலியில் உள்ள ஆசிரியரின் ஆதிக்கத்தை படையெடுப்பை மேற்கொண்டு ஆஸ்திரிய மன்னன் இரண்டாம் பிரான்சிஸ் உடன் கம்போடியா உடன் படிக்கையினை மேற்கொண்டான்.
இங்கிலாந்தினுடைய வர்த்தக உறவைத் துண்டிப்பதற்காக கி.பி 1798 ஆம் ஆண்டு எகிப்து மீது படையெடுத்து ஆரம்பத்தில் தோல்வ ிடைந்திருந்தாலும் மீண்டும் தொடர்ச்சியாக போரிட்டு இங்கிலாந்திடம் இருந்து மோல்டா தீவை கைப்பற்றிக் கொண்டான்.
இங்கிலாந்து வர்த்தக ஆதிக்கத்தை குறைப்பதற்காக மீண்டும் இங்கிலாந்திற்கு எதிராக போர் தொடுத்து இங்கிலாந்துடன் கி.பி 1802 ஆம் ஆண்டு ஏமியன்ஸ் உடன்படிக்கையினை மேற்கொண்டான்.
இரண்டாவது தடவையாக ஆஸ்திரியாவுக்கு எதிராக போர் தொடுத்து ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி பிரான்சுடன் லுணுவில உடன் படிக்கையை மேற்கொண்டான்.

இங்கிலாந்துடன் தொடர்ச்சியாக போரிட்டு கி.பி 1805 ஆம்ஆண்டு இங்கிலாந்துடன் போரில் ஈடுபட்டு திரபல்கார் எனும் இடத்தில் பாரிய போராக நடந்து இப்போரில் நெற்போலியன் தோல்வி அடைந்து கொண்டான். ஆங்கில தளபதி நெல்சன் பிரபு திறமையாக போரிட்டு நெற்போலியனை தோல்வி அடையச் செய்தார். இங்கிலாந்துடன் போர் செய்து வெல்ல முடியாது என நினைத்து நெற்போலியன் இங்கிலாந்தை பொருளாதார ரீதியாக கட்டுப்படுத்த 1806 ஆம் ஆண்டு கண்ட திட்டம் எனும் கண்டத்து பொருளாதார முறையினை உருவாக்கி பிரான்ஸ் சார்பான நாடுகள் இங்கிலாந்துடன் வர்த்தகம் செய்ய முடியாது எனவும் அவ்வாறு மீறி வர்த்தகம் செய்தால் அந்நாடு ஆக்கிரமிக்கப்படும் எனவும் இங்கிலாந்தை வர்த்தகரீதியாக கட்டுப்படுத்தினான்.

கி.பி 1806 ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு எதிராக போர்தொடுத்து ஜேர்மனியின் 369 இராச்சியஙகளை 39 இராச்சியங்களாக உருவாக்கு றைன் கூட்டரசு எனும் அரசினை உருவாக்கி ஜேர்மன் ஐக்கியத்திற்கு வித்திட்டார். ரஷ்யாவின் பலத்தை குறைப்பதற்காகவும் அரசியல் அதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்காகவும் கி.பி 1807 ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கு எதிராக போரை மேற்கொண்டு றைன்லாந்து ரீல்சுந் உடன்படிக்கையினை மேற்கொண்டு ரஷ்யா ஆதிக்க தன்மை யை குறைத்தார். 1809 ஆம் ஆண்டு மீண்டும் ஆஸ்மதிரியாவுடன் போரிட்டு ஆஸ்திரியா பிரதேசம் முழுவதையும் பிரான்சினுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். போலாந்தையும் பிரான்சின் ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன் திரபல்கார் போரில் ஸ்பானியாவை தோற்கடித்து ஸ்பானியாவையும் பிரான்சின் ஆதிக்கத்தின் கிழ் கொண்டு வந்தான்.

இவ்வாறாக ஐரோப்பிய தேசம் முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்த நெற்போலியன் இங்கிலாந்தினுடைய படை வல்லமை காரணமாக வீழ்ச்சி அடைந்து பிரான்ஸின் என்றும் மறக்க முடியாத மாவீரனாக திகழ்கின்றான்.

**-முத்துலிங்கம் தர்ஷாயினி**
**கலைப்பிரிவு(2025)**

## தோழி

கோடி நட்சத்திரங்கள் படைகளாய் இருந்தாலும்.
படையின் அரசன் நிலவே
ஆயிரம் உறவு மண் மீது இருந்தாலும் அனைத்தையும்
தலை தாங்குவது நட்பே!

தாயோடு தந்தை பாசம் தந்து
தரணி தன்னை நான் வெல்ல என் துணையாய் வந்தவளே!
அன்னையூட்டும் அவ் அன்னத்தை விட
உன் கைகளின் சுவையில் உள்ள உணவே
எனக்கு புத்துயிர் அளிக்குமடி

நான் தோளில் சாயத் தோழியாய் வந்தவளே!
மடியில் நான் தூங்க தாயாய் வந்தவளே!
நான் செய்யும் குறும்புத்தனங்களை பொறுத்து
தன் குழந்தையாக என்னை அரவணைப்பவளே!

என் உடலில் சிறு காயம் -உன்
கண்ணோரமாய் பல கண்ணீர் துளிகள்
எதற்கு என்று நான் வினவினேன்
என் காயம் உன் உடலில் உதிரமாய்
சிந்துகின்றது என்கிறாள்

பருவங்கள் கடந்து உருவ நிலையில்
மாற்றங்கள் நிகழ்ந்தாலும்
இம் மணணுலகத்தில் நம் உடலில் உயிர் உள்ளவரை
நட்பென்ற பூங்காவனத்தில் வசித்திடுவோம்.

**ர.சமரிசை**
**கலைப்பிரிவு(2025)**

## தமிழ் மொழியின் பெருமை

திராவிட குடும்பத்திலே தோன்றி வளர்ந்த தமிழ் மொழியே தற்காலத்தில் எண்ணிறைந்த மக்களால் பேசப்படும் செம்மொழியாக விளங்குகின்றது. 1978 ஆம் ஆண்டு இலங்கையின் அரச கரும மொழியாக்கப்பட்ட இம்மொழி ஈழத் தமிழர்களின் நெஞ்சிலே வற்றாத ஊற்றாக

விளங்குகின்றது. தென்னிந்தியர்களாலும் இளைஞர்களாலும் அதிகளவில் பேசப்பட்டு வருகின்ற இத் தமிழ் மொழி 1994 ஆம் ஆண்டு செம்மொழியாக்கப்பட்டது. சங்க காலம் சங்கமருவிய காலம் பல்லவர் காலம் சோழர்காலம் நாயக்கர் பாலம் போன்ற காலங்களிலேயே இம்மொழியில் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டு தமிழ் மொழியின் பெருமை எடுத்தியம்பப்படுகின்றது.

உலகிலே ஏனைய மொழிகள் எல்லாம் வாயினால் பேசப் பெற்ற செவிக்கு கருத்தை உணர்த்தவல்லவை ஆனால் சிறப்புமிக்க தமிழ் மொழியானது மனதினால் பேசப்பெற்று இதயத்தால் உணர வைக்கும் மொழியாகும். காலத்தால் என்றென்றும் அழியாத செழுமை வாய்ந்த மொழி தான் தமிழ் மொழியாகும். இலக்கியமும் இலக்கணமும் கொண்டு காலத்தை வென்று பல்வேறு நூற்றாண்டுகள் கடந்து இன்றும் இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ் சிறப்பினை வார்த்தைகளால் சொல்ல இயலாது.

தமிழ் மொழியின் சிறப்பை போற்றிப் பாடியவர்கள் எண்ணிக்கை எண்ணில் அடங்காது ‘‘தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’’ என்று பாரதிதாசன் பாடியுள்ளார். மற்றும் பாரதியார் ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்’’ என்று கூறுகின்றார் இத்தகைய தமிழ் மொழியின் சிறப்புக்கள் தொன்மையானது.

செம்மொழியாகிய தமிழ் மொழி உயர்ந்து நிற்பதற்கு முக்கிய காரணம் அதன் தொன்மைத் தன்மையே ஆகும். உலகில் பலமொழியியலாளர்கள் கூறுகின்றனர். கால மாற்றத்திற்கு ஏற்ப புத்தகம் புது மொழிகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இருப்பினும் நம் தமிழ் மொழி மாந்தர் மனதை நிறைக்கும் இன்ப மொழி மட்மல்லாது அழிவு நிலையற்ற உலக மொழியும் ஆகும். ‘‘தமிழினம் என்று ஓர் இனமுண்டு தனியே அதற்கு ஓர் குணம் உண்டு’’ என்று நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை தமிழை உயிராய் நேசிக்கும் தமிழர்களின் பெருமைகளை உலகிற்கு எடுத்துக்காட்டி உள்ளார். ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தரவாரா’’ என விழுமிய சிந்தனைகளை மக்கள் மனங்களிலே புகுத்தி பண்பாடுடைய மனிதர்களாக வாழ வழிகாட்டி நிற்கின்றன. ‘‘தமிழுக்கு நிலம் என்று பேர் இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவு’’ என்று பாரதிதாசன் தன் பாடலின் மூலமும் இதனையே தெளிவுறுத்துகின்றார்.

தலையிலே சீவகசிந்தாமணியும் இடையிலே மணிமேகலையும் காதிலே குண்டலகேசியும் கையிலே வளையாபதியும் காலிலே சிலப்பதிகாரமும் என உடல் சார்ந்து உலகிகளையும் தத்துவத்தினையும் எடுத்தியம்பும் சிறப்பு வாய்ந்த இலக்கியங்களை தமிழ் மொழியில் நாம் காணலாம். வாசகர்களின் மனதினைக் கவரும் இலககியங்கள் அதிக அளவில் தமிழ் மொழிகளில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் என்பதை யாராலும் மறுத்துரைக்க முடியாது.

திராவிட மொழிகளிலே மூத்த மொழி என்பதால் தமிழ்மொழி சிறப்படைகின்றது. ‘‘கல்தோன்றி மண் தோன்றா காலத்திலே முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ் குடி’’ என புறப்பொருள் வெண்பா மாலை தமிழ் மொழியின் தொன்மையினை எடுத்தியம்புகின்றது. தமிழானது உலகியல் காலம் பிறக்கும் முன்பு பிறந்தது. எக்காலமும் நிலைத்திருப்பது உலகிலே இருள்போக்கும் சக்தி இரண்டு. ஒன்று செங்கதிர் மற்றொன்று செந்தமிழ். செங்கதிரானது

உலகின் இருளை எவ்வாறு போக்குகின்றதோ அவ்வாறே செந்தமிழ் ஆனது மக்கள் வாழ்வின் இருளைப் போக்குகின்றது.

ஜி.யுபோப் அவர்கள் தன்னை கல்லறையிலே ஒரு தமிழ் மாணவன் எனப் பொறிக்கப்பட வேண்டும் என விரும்பி இருந்தார். மற்றும் சாகும்போது. தமிழ் படித்து சாக வேண்டும். என் சாம்பலும் தமிழ் மணக்க வேக வேண்டும் என்ற கவி வரிகளும் தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றது. தாய் மொழியாம் தமிழ் மொழி தித்திக்கும் தேன்மொழி அதுவே நம் உலகின் செம்மொழி என்ற வரிக்கமைய இனிமை பயக்கும் இம்மொழி என்றும் இம்மண்ணிலே வாழ வேண்டும்.

தமிழ் என்னும் கதவிற்கு பாதுகாப்பு என்னும் பூட்டாக என்றென்றும் நான் நின்றிடுவேன். ‘‘அம்புமலை சுண்டும் அஞ்சாது நின்றிடுவேன். அன்னையான தமிழ் அவள் அகத்திலே நிற்கையிலே’’ துன்பங்கள் கண்டும் துவண்டிடாது நிற்பேன் நான் அன்னை போல் நினைக்கும் என் தமிழ்மாது என்னுள் இருக்கும் வரை.

**ச.துஜிதிகா**
**கலைப்பிரிவு(2025)**

## <u>எனது ஆசை</u>

எல்லோராலும் போற்றப்பட
என்றும் நான் உயர
அதிபர் ஆசிரியர்கள் வாழ்த்தி நிற்க
கற்றமது போற்று நிற்க.

பெற்றவர்கள் கட்டியணைக்க
பரீட்சையில் வெற்றி பெற்று
பல்கலைக்கழகம் சென்று
பல கலைகள் தான் கற்று.

ஆசானாக நானும் உயர்ந்து
அறிவுரைகள் பல கூறி
கல்வி மானாக நான்
கல்வியறிவு பெற்று

மாபெரும் சபையினிலே
மாலைகள்,பட்டங்கள் பல பெற்று
மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்
என்பதே எனது ஆசை.

**இ.டர்சியா**
**கலைப்பிரிவு(2025)**

## <u>நண்பர்கள்</u>

நட்பு என்பது அனைவருக்கும் இருக்கக்கூடிய நற்பண்புகளில் ஒன்றாகும். ஆயிரம் பேரை நண்பணாக வைத்திருக்கும் பெருமையை விட அந்த ஆயிரம் பேரும் எதிர்க்கும் பொழுது அவர்களை எதிர்த்து நிற்கின்ற நண்பர்களை வைத்துக் கொள்வதே பெருமையாகும்.

நண்பர்களாக ஒன்று சேர்ந்து சுற்றி வருகின்ற பொழுது அவர்கள் கோர்த்திருக்கும் கைகள் வீழ்வது கடினம்... அவ்வாறு வீழ்ந்தாலும் நல்ல நண்பர்களின் இணைப்பிற்கு பிரிவென்பதே கிடையாது.. உன்மையான நண்பர்களுடைய நட்பினை அன்பு ஒன்றினாலே தவிர எத்தனை கோடி கொடுத்தாலும் விலைக்கு வாங்குவது முடியாதொன்றாகும். இடம் காலம் நேரம் எதுவும் பார்க்காமல் சந்தித்த முதல் நாளிலே மனம் விட்டுப் பேசி நண்பர்களாக ஒன்றிணைந்து. கொண்டதன் பின்னர் பல நாட்கள் சென்று காரணம் அரியாமல் தனிமை கொண்டு கோவப்பட்டு அதன் பின் பொறுமையாக மனம் விட்டு நண்பர்களுடன் பேசிக் கொள்வதால் பழைய நட்பு மீண்டும் ஒன்று சேர்ந்து தாங்கி அணைத்துக் கொள்வதே நட்பின் மகிமை நண்பர்களின் பெருமை விட்டுப் பிடிப்பதும் விட்டுக் கொடுப்பது மாத்திரமே நட்பாகி விடாது.. இறுதிவரை நேசித்த நண்பனை விட்டு விலகாமல் இருப்பதே உண்மையான நட்பின் இலக்கணமாகும்.
உறவுமுறை தெரிந்து கொள்ளாமல் முகவரியினை அறிந்து கொள்ளாமல் நண்பர்கள் மேல் நாம் வைக்கும் நம்பிக்கையினை வெறும் வார்த்தைகளினால் சொல்ல முடியாது. நம் நண்பர்களுக்கு பிரச்சினைகள் வருகின்றபோது அதனை எம்மால் முடிந்ததை செய்து போக்கிக்கொள்வதே ஓர் நட்பின் அமப்படை அம்சமாக கொள்ள முடியும். காலம் அமைத்துத் தந்த என்னுடைய நண்பர்கள் வெறும் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடமே பாடசாலை அப்பாடசாலைக்கு உயிரூட்டியதோ மாணவர்கள் அவ்வாறு பாடசாலையின் மூலமாக கிடைத்த பொக்கிஷமே எனது நண்பர்கள். ஒரு பிரச்சினையின் போது தன்னம்பிக்கை இழந்து மனம் உருகி வீழ்கின்ற தோழமை வாய்ப்பு ஒருவருடைய வாழ்க்கையில் வரமாகும். ஆந்த வரம் என் இந்த பாடசாலையின் ஊடாக கிடைத்ததிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.. திசைகள் கூட தெரியாமல் நீண்ட வழியிலே பயணிக்க விரும்புகிறேன் என்னுடைய இனிய உடன் உடன் பிறவா உறவுகளான நண்பர்களுடன்...

**அப்ராபானு**
**கலைப்பப்பிரிவு(2025)**

# முயற்சி பயிற்சி மற்றும் வளர்ச்சி

வாழ்க்கையில் வெற்றியை விரும்பாதவர்கள் யாரும் இல்லை ஆனால் வெற்றிக்குளளிய வழி எதுவும் இல்லை முயற்சி பயிற்சி வளர்ச்சி ஆகிய மூன்று படிகளிகளினையும் கடந்தால் மாத்திரமே வெற்றியின் வாயிலை அடையமுடியும். முயற்சியில் தொடங்கும் ஒவ்வொரு நாளும் வெற்றிக்கான வாசலை திறக்கும் பாலம் பயிற்சியில் தான் ஒளி மறைந்திருக்கும் பரிசுகள் எல்லாம் அதில் புதைந்திருக்கும் வளர்ச்சி என்பது ஒரு பயணம் தான் ஒரே நாளில் அடைய முடியாது மனித வாழ்க்கையின் முக்கிய குன்றாக விளங்கும் முயற்சி, பயிற்சி, வளர்சசி ஆகியவற்றினை கடந்து வருபவனே வெற்றியெனும் மகுடத்தினை சூடிக்கொள்வான்.

முயற்சி என்பது ஒரு செயலுக்கான முதல் படி ஒருவரின் எண்ணம் செயலாக மாறும் தருணமே முயற்சி. முயற்சியின்றி வெற்றி என்பது வெறும் கனவாக இருந்து விடும் ஒரு மாணவன் தேர்வில் வெற்றி பெற முயற்சி செய்ய வேண்டும். ஒரு விவசாயி நல்ல விளைச்சல் பெற தினமும் கடினமாக உழைக்க வேண்டும். முயற்சி இல்லாமல் முன்னேற்றம் இல்லை. நாம் ஒரு புதிய விடயத்தை செய்ய விரும்பும் போது அதற்கு முதலில் நம் மனதில் முயச்சி பற்றிய உணர்வு உண்டாக வேண்டும். சிறந்த முடிவுகள் முயற்சியின் மூலமே கிடைக்கின்றன. எத்தனை தடைகளை சந்தித்தாலும் அதை மீறி முயற்நி செய்யும் மனப்பாங்கு உண்டாக வேண்டும்.

‘‘முயற்சி செய்யும் மனம் இருந்தால்
முடிவுகள் நம்மை தேடி வரும் தடைகள் எத்தனை
வுந்தாலும் தளராமல் எழுந்து நடப்போம்’’

பயிற்சி என்பது ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்து அதில் திறமை பெறும் செயலாகும். மனிதனுடைய வளர்ச்சி பயிற்சியின் மூலமாகத்தான் ஏற்படுத்தப்படுகின்றது. ஒரு இசைக்கலைஞனால் தினமும் பயிற்சி செய்வதால் தான் மேடை மீது சிறப்பாக இசைக்க முடிகிறது. அதே போல் மாணவர்களும் தினமும் பாடங்களைப் பயிற்சி பயிற்சி செய்தால் தான் தேர்வில் வெற்றி பெற முடியும். ‘‘பயிற்சி மனிதனை சிறந்தவனாக்கும்’’ பயிற்சிகள் மூலம் நாம் துன்பங்களை தாங்கும் சக்தியையும் தோல்விகளை சமாளிக்கும் மன உறுதியையும் பெற முடியும். முதலில் நாம் செய்கின்ற முயற்நி தவறாக இருக்கலாம் ஆனால் அடிக்கடி செய்யும் பயிற்சி அத்தவறினை மாற்றி அமைக்கும் சிறந்த கருவியாகும். தோடர் பயிற்சி இல்லாமல் எந்த ஒரு விடயத்திலம் மேன்மை அடைய முடியாது.

‘‘பயிற்சி என்பது பொன்னான பாதை
பிழைகளை செதுக்கும் கலை
நாள்தோறும் முயன்றால் தெரியும்
நம் திறமை என்னவென்று’’

வளர்ச்சி என்பது முயற்சி பயிற்சி ஆகிய இந்த இரண்டு கூறுகளின் பயனாக கிடைக்கும் ஓர் உயர்ந்த நிலையாகும். முயற்சி செய்து பயிற்சி பெறும் மனிதன் அறிவிலும் செயல்திறனிலும் வளர்ச்சி அடைகின்றான். இந்த வளர்ச்சி தான் வாழ்க்கையை அமைதியாகவும் வெற்றிகரமாகவும் மாற்றுகின்றது. அறிவும் அனுபவமும். ஒன்று சேரும் தருணம் வளர்ச்சி தோன்றுகிறது. குடின உழைப்பு நிறைந்த மனித வாழ்வில் வளர்ச்சி நிச்சயம் உதயமாகும். வளர்ச்சி என்கின்ற சிகரத்தினை தொடுவதற்கு பல்வேறு கரடு முரடான பாதைகளை கடக்க வேண்டும். அவ்வாறு கடந்த பின் வளர்ச்சி எம்மை தேடி வரும்

‘‘வளர்ச்சி என்பது வெற்றியின் மலை
மேலேுற ஆசைப்படுவது மாத்திரம் போதாது
ஆடிக்கடி விழுந்தலும் சரி நம்பிக்கையோடு நம்மை நாமே உயர்த்த வேண்டும்’’

மனித வாழ்வை செம்மைப்படுத்தும் முயற்சி பயிற்சி வளர்ச்சி ஆகிய இந்த கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டது ஒருவரை சாதனையாளராக மாற்றும் எந்த ஒரு விடயத்திலும் பயப்படாமல் நம்பிக்கையுடன் முயற்சி செய்து பயிற்சி செய்தால் வளர்ச்சி நிச்சயம் கைகூடும். நீ முயற்சி செய்வாயாக இருந்தால் பயிற்சி உன்னை கூர்மையாக்கும் அதன் பின் வரும் வளர்ச்சி உன்னுடையது ‘‘முயற்சி செய் பயிற்சி கொள் வளர்ச்சி அடை’’ என்பதே வாழ்க்கையின் நெறி.

‘‘விண்மீனாக ஒளிர வேண்டும் எனில்
வேராக நிலத்தில் சிரம் வைக்க வேண்டும்
முயற்சி பயிற்சி வளர்ச்சி மூன்றுமே வாழ்க்கையை வெற்றிப்படுக்கையில் நடந்தும் தீபமே:

**நௌ.பா.நுஸ்கா**
**கலைப்பப்பிரிவு(2025)**

# Life with People

Life is not meant to be lived alone. Human beings are social creatures, and we need other people to be happy and successful. From the time we are born, we depend on people. Our parents take care of us, feed us, and teach us right from wrong. Teachers guide us at school, and friends make life enjoyable. Every person we meet plays a role in shaping who we are.

Living with people brings both happiness and challenges. We celebrate festivals, birthdays, and achievements with our family and friends. Sharing happy moments creates memories that stay with us forever. At the same time, we may face disagreements or misunderstandings. These situations teach us patience, tolerance, and the importance of listening to others. Learning to forgive, compromise, and respect differences is an important part of life. Life with people is like a journey on a winding road – sometimes smooth, sometimes difficult, but always exciting.Being with people also helps us grow as individuals. We learn new ideas, cultures, and ways of thinking from others. For example, a friend may introduce us to a hobby, a teacher may inspire us to work hard, and a neighbor may show us kindness. These small experiences teach valuable lessons. Acts of help and kindness, whether giving or receiving, make us feel happy and connected.Friendship is one of the most important parts of life with people. True friends support us in good and bad times. They listen to our problems, celebrate our successes, and encourage us when we feel low. Family is equally important. Parents, siblings, and grandparents provide love, guidance, and protection. Communities and society also play a big role. Living in harmony with others makes society peaceful and cooperative.

Life with people is also about sharing and caring. Simple actions like greeting someone, helping a friend, or respecting elders create a positive environment. These small gestures build trust and strengthen relationships. The lessons we learn from others—honesty, empathy, cooperation, and patience—become the foundation of our character.In conclusion, life with people is full of joy, learning, and growth. No one can live alone. Friends, family, neighbors, and society make life meaningful. By caring for others, respecting their feelings, and sharing experiences, we make our life happy and peaceful. Life with people is a beautiful mix of laughter, challenges, love, and learning, and it makes our journey truly special.

K.Dijulan
Maths Stream

**Space xi Revolutionizing**
**Space Travel.**

Space X founded by Elon musk in 2002, has dramatically reshaped the future of space exploration with a mission to make space travel more affordable and eventually colonize mars. The company has achieved groundbreaking milestones in both research and technology.

Their research focuses on reusable rocked Technology, deep space travel, and sustainable life support systems. Space X has also developed the star link project, aiming to provide global internet coverage through a vast network of satellites.

Among their achievements, the most notable include being the first private company to send a spacecraft (Dragon) to the International space station (ISS) in 2012, and the historic crewed mission. Demo-2, in 2020. Space X has successfully landed and reused its falcon g rocket multiple times, significantly refusing the cost of space mission.

The company's key spacecraft include falcon g. Falcon Heavy. Dragon and the next generation starship designed for mars colonization. Each represents a leap in innovation and engineering.

Their latest victory come in 2025.When starship complete a successful orbital flight and safely returned – marking a major step toward human missions to the moon and mars. Space X continues to lead the new era of commercial spaceflight With vision ambition and relentless progress.

**Kalainilavan**
**Bio Stream**

# Value of Time Management

Time is one of the most valuable resource. We have yet it is also thhe most easily wasted. Effective time Management helps us to got maximum use of every moment, ensuring that we achieve our time well, we can be able to prioritize tasks, stay organized and reduce the stress that comes with last – minutes work.

Time Management is not just about working harder. It is about working smarter. When we plan and organize our day, we create a road map that guide's us to success. It allows us to focus on high priority tasks, avoid distraction's, and finish tasks efficiently. By allocating specific time for each task, we ensure that nothing important is overlooked.

More over, good time Management helps in balancing work and personal life. With a clear schedule, we can make time for family, hobbies and our relaxation which are equally important for our over all well being It also Foster's discipline and self control, teaching us how to avoid procrastination.

In the fast world we must have good time management. It's the key to productivity, success and maintaining a healthy work and life.

M. Thasangan
Tech Stream

# Environment pollution Environment

pollution is an escalating global problem with far – reaching Consequence’s for the environment, human health and over all well – being. The three primary types of pollution – air water and soil pollution – have detrimental effect’s on eco system’s. Wildlife and human societies. Air pollution arises mainly from the burning of fossil fuels, industrial processes and vehicular emission. It releases pollutants such as carbon monoxide, sulfur dioxide, nitrogen oxides and particulate matters into the atmosphere. Prolonged exposure to these pollutants can lead to a range of health issues. Including respiratory diseases. Cardio vascular problems and even premature death.

Additionally air pollution contributes to climate change by increasing green house gas concentrations. Water pollution results from the contamination of water bodies like river, lakes and ocean by various pollutants, including chemicals, sewage heavy metal and plastics. This contamination endangers aquatic life disrupts ecosystems and compromises the availability of safe drinking water polluted water can also lead to spread of water borne diseases. Affecting human health. Soil pollution occurs when harmful substance metals contained the soil.

This pollution reduces soil fertility, negatively impacting agricultural productivity and food safety it can also harm plants, animals and microorganisms crucial for maintain healthy ecosystems. Addressing environment pollution requires a multifaceted approach. Stricter regulations on emissions, waste disposal and chemical use. Transitioning to clean and renewable energy source, reducing vehicle emissions and investing in public transportation can help combat air pollution. Individuals can also make a difference by adopting eco – friendly habits. Conserving energy reducing waste and supporting policies that prioritize environmental protection educating the public about the consequences are vital steps toward a cleaner the their planet. Ultimately collective efforts are crucial in tackling environment pollution and ensuring a sustainable future for all.

**S. Sankeerththanan**
**Maths Stream**

# How to Be a Good Friend

Friendship is one of the most valuable relationships in life. Being a good friend means more than just spending time together; it involves trust, support, and understanding. Here are some important ways to be a good friend. Always be a good listener. When your friend shares their thoughts or problems, give them your full attention. Sometimes, people just want someone to hear them without judging or giving advice. Listening shows that you care and respect their feelings.

Be trustworthy. Keep your friend's secrets safe and do not gossip about them behind their back. Trust is the foundation of any strong friendship. If your friend knows they can rely on you, the bond between you will grow stronger. Support your friend in both good and bad times. Celebrate their successes and encourage them when they face challenges. Being there during difficult moments shows loyalty and makes your friendship meaningful.

Be honest but kind. If your friend asks for advice or feedback, be truthful but gentle. Honesty helps friends grow, but it should never hurt or offend. Respect your friend's boundaries and differences. Everyone has their own opinions, habits, and ways of doing things. Accepting these differences without judgment strengthens your connection.
Lastly, spend quality time together Friendship flourishes when you share experiences and create memories. Even small gestures like checking in with a message or helping with a task show you value the friendship. In conclusion, building a good friendship requires effort, patience, and empathy. When you are kind, honest, and supportive, your friendships will thrive and bring joy to your life and your friend’s life. True friendship is a treasure worth nurturing every day.

**J.Komakan**
**Tech Stream**

# Be Smart

An old father, He wrote a letter to his son in prison. It said,

"Son, this time I can't grow crops for you. If you were there you would have definitely helped me."

Then the son wrote a letter saying,

"Father, under no circumstances dig the land. I buried all the money in it."

The police read the son's letter. The police then excavated the entire land, but they got nothing.

The son writes back to the father,

"Now you can sow the seeds in the ground. I could only do this from jail…"

What it teaches us is that one can control the brain.

**P.Sanoyan**
**Tech Stream**

# The Gift of Teaching

In a room where dreams take flight,
A teacher sparks the mind with light.
Not just books or chalk and board,
But hearts and hopes are gently stirred.


With every word, a seed is sown,
In minds where wisdom's roots are grown.
Patience paints each learning day,
Guiding souls along the way.

Mistakes are met with kind embrace,
In every child, the teacher sees grace.
Not for grades or fleeting praise,
But for the joy of minds they raise.

A noble path, both tough and true,
A life of purpose teachers pursue.
For in their hands, the world begins
With future leaders, queens and kings.

So here's to those who dare to guide,
With love and fire deep inside.
Teaching is more than just a part
It's the beating of a generous heart.

**T.Priyanthana**
**( Teacher - ICT )**


Literacy
Day
World
Literacy
DAY



நௌ.பா.நுஸ்கா
கலைப்பிரிவு


















# முழவம் - 02

## நன்றியுரை

2025 ஆண்டு முழவம்-02 சஞ்சிகை இதழிற்கு வாழ்த்துச்செய்திகளை வழங்கிய அதிபர் அவர்கட்கும் மற்றும் ஆக்கங்களை தந்துதுவிய மாணவத்தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர் அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

ஆக்கங்களை கணினியில் செவ்வை பார்த்த மாணவத்தலைவன் ஜெ.கோமகன் மற்றும் அதை செவ்வை பார்த்த ஜ.அப்ராபானு, றொ.நுஸ்கா மாணவத்தலைவிகளுக்கும் மற்றும் வடிவமைப்புச்செய்த "SNT FRAME CENTER" Partners ற்கும் நிறைவான நன்றிகள்.

முழவம் இதழ் வெளியீடு வெளிவர நிதி அனுசரணை வழங்கிய 2025,2026 உயர்தர மாணவர்களுக்கும், 2024 மாணவ முதல்வர்களுக்கும் என்றும் எம் அணி கலந்த நிறைவான நன்றிகள்.

